சனவரி
2019

# வழிகாட்டல் 2019

## 2019 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA



# வழிகாட்டல்:

# 2019 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள்

சமர்ப்பிப்பவர்

முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி

ஆளுநர்

இலங்கை மத்திய வங்கி

2019 சனவரி 2

## 1. அறிமுகம்

மேதகையீரே, நாணயச்சபை உறுப்பினர்களே, மூத்த துணை ஆளுநரே, துணை ஆளுநர்களே, உதவி ஆளுநர்களே மற்றும் மத்திய வங்கி அலுவலர்களே, கௌரவமிக்க விருந்தினர்களே, சீமாட்டிகளே, கனவான்களே,

2019 இற்கும் அதற்கு அப்பாலுக்குரான நாணய மற்றும் நிதியியல் துறைக் கொள்கைகள் தொடர்பான சபையின் பணிப்புரைகளை தெளிவுபடுத்துகின்ற இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டலைச் சமர்ப்பிக்கும் இந்நிகழ்விற்கு வந்திருக்கும் தங்களை மனப்பூர்வமாகவும் மகிழ்ச்சியுடனும் வரவேற்கின்றேன்.

இலங்கை மத்திய வங்கியின் பன்னிரண்டாவது வழிகாட்டலை நாங்கள் சமர்ப்பிப்பதனூடாக எதிர்காலக் கொள்கைகளையும் நெறிப்படுத்தல்களையும் பகிர்ந்து கொள்கின்ற எமது பாரம்பரியத்தினை நாம் தொடருவதனை தங்களுக்கு தயவுடன் குறிப்பிட விரும்புகிறேன். வழிகாட்டலானது நல்ல வரவேற்பைப் பெற்றிருப்பதுடன் முக்கிய கொள்கை ஆவணமாக விளங்கும். இது பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்களுக்கும் அநேக நன்மைகளை வழங்குகிறது. இவ்வறிவித்தலானது வழிகாட்டியாக அமைந்து, உங்கள் சொந்தக் கொள்கைகளையும் திட்டங்களையும் காத்திரமான முறையில் வடிவமைத்துக் கொள்வதற்கும் இறுதியாக நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார அபிவிருத்திக்கும் எமது மக்களின் சிறந்த வாழ்க்கைத்தரத்திற்கும் பங்களிக்குமென நாம் எதிர்பார்க்கிறோம்.

எமது கொள்கை நிலையினை விளக்குவதற்கும் 2018ஆம் ஆண்டின் பொருளாதாரம் தொடர்பான எமது மதிப்பீடுகளை வழங்குவதற்கும் நான் இவ்வுரையினை தொடங்குகின்றேன். **2018இல் இலங்கையின் பொருளாதாரம்** உலகளாவிய பொருளாதாரம், நிதியியல் மற்றும் வெளிநாட்டுத் துறையினை மோசமாகப் பாதித்த புவியியல்சார் அரசியல் அபிவிருத்திகள் என்பனவற்றிலிருந்து முக்கியமாகத் தோன்றிய அதிகளவான சவால்களையும் **எதிர்நோக்கியது.** பல உள்நாட்டுச் சவால்களும் காணப்பட்டன. நிச்சயமற்ற அரசியல் நிலைமைகள் குறிப்பாக, ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கான சவால்களை அதிகரித்தன. 2017இன் குறைவடைந்த வளர்ச்சியைத் தொடர்ந்து 2018இலும் குறைவான பொருளாதார வளர்ச்சி தொடர்ந்தது. சாதகமான வானிலை நிலைமைகள் வேளாண்மைத் துறையின் மீளெழுச்சிக்கு ஆதரவளித்த வேளையில் பணிகள் நடவடிக்கைகளின் விரிவாக்கம் பரந்த அடிப்படையினைக் கொண்டிருந்தது. எனினும், 2018இல் கைத்தொழில் நடவடிக்கைகள்

மெதுவடைந்தமைக்கு கட்டடவாக்கத் துறையின் மெதுவான போக்கே முக்கிய காரணமாகும். உணவு விலைகளும் நிருவாக விலைச் சீர்திருத்தங்களும் தளம்பலுற்றமையின் காரணமாக நுகர்வோர் விலைகள் தற்காலிகமாக உயர்ந்தும் தாழ்ந்தும் காணப்பட்ட போதும் 2018இல் நுகர்வோர் விலைப் பணவீக்கம் தொடர்ந்தும் குறைவாகவே காணப்பட்டது. கடந்த இரு ஆண்டுகளில் மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கைக்குப் பதிலிறுத்தும் விதத்தில் நாணய மற்றும் கொடுகடன் வளர்ச்சி 2016 மற்றும் 2017இல் அவதானிக்கப்பட்ட உயர்ந்த மட்டங்களிலிருந்து 2018இல் குறைவடைந்தது. உள்நாட்டுக் கொடுகடன் பாய்ச்சல்களில் ஏற்பட்ட போதுமான விரிவாக்கத்திற்கு இவ்வாண்டுப்பகுதியில் தனியார் துறையினரிடமிருந்தான கேள்வியே தூண்டுதலாக அமைந்தது.

இவ்வபிவிருத்திகளின் வழிகாட்டல் அதேபோன்று இடர்நேர்வு மற்றும் சவால்களினைப் பரிசீலனையில் கொண்டும் 2018இல் நாணயக் கொள்கை நடத்தை தொடர்பில் நாம் மிகக் கவனமான அணுகுமுறைகளைப் பின்பற்றினோம். பணவீக்கம் மற்றும் பணவீக்கத் தோற்றப்பாடுகளில் காணப்பட்ட சாதகமான அபிவிருத்தி, அதேபோன்று உண்மைப் பொருளாதாரத்தில் காணப்பட்ட குறைவடைந்த செயலாற்றம் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு 2018 ஏப்பிறலிலிருந்து கொள்கை வட்டி வீத வீச்சின் மேல் எல்லையைக் குறைத்ததன் மூலம் 2015 இறுதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட நாணயக் கொள்கை இறுக்கமாக்கலை முடிவுறுத்துவதற்கான சமிக்ஞைகளை மத்திய வங்கி விடுத்தது. இருப்பினும் கூட, பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறை உறுதிப்பாட்டினைப் பாதித்த உலகளாவிய அபிவிருத்திகளின் தாக்கத்தினைப் பரிசீலனையில் கொண்டு, மத்திய வங்கி அடுத்து வந்த காலப்பகுதியில் சமநிலையான நாணயக் கொள்கை நிலையொன்றினைப் பேணியது.

உள்நாட்டுப் பணச் சந்தையில் ரூபா திரவத்தன்மையில் நீடித்த உயர்ந்த பற்றாக்குறை 2018 நவெம்பரில் வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புக்கள் மீதுமான ஏற்புடைத்தான நியதி ஒதுக்கு விகிதத்தினைக் குறைப்பதற்கு மத்திய வங்கியை நிர்ப்பந்தித்த வேளையில் நியதி ஒதுக்குத் தேவைப்பாடு குறைக்கப்பட்டமையின் காரணமாகத் தோன்றிய நிரந்தரமான திரவத்தன்மை உள்ளீடுகளின் காரணமாக வட்டி வீதங்களின் மீதான தாக்கத்தினை சமநிலைப்படுத்துவதற்கு கொள்கை வட்டி வீதங்கள் அதிகரிக்கப்பட்டன. நடுத்தர காலத்தில் நடு ஒற்றை இலக்க மட்டங்களில் பணவீக்கத்தினை சமநிலைப்படுத்துவதையும் நடுத்தர காலத்தில் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த வளத்தினை அடைவதனை இயலச்செய்யும் விதத்தில் பணவீக்க

எதிர்பார்ப்புக்களை நிறுத்தி வைப்பதற்கும் பரந்த நோக்கமாகக் கொண்டு இவ்வெச்சரிக்கையுடன் கூடிய இவ்வணுகுமுறையினைப் பின்பற்றினோம்.

வெளிநாட்டுத் துறையில், ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வளர்ச்சியை இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட விரிவாக்கம் விஞ்சிய போதும் சுற்றுலா, தொழிலாளர் பணவனுப்பல்கள், வெளிநாட்டு நேரடி முதலீடுகளிலிருந்தான வருவாய்கள் மற்றும் அரசாங்கத்திற்கான படுகடன் தொடர்பான உட்பாய்ச்சல்கள் என்பன சென்மதி நிலுவையின் தாக்கத்தினை ஓரளவிற்குக் குறைப்பதற்கு உதவின. உலகளாவிய நிதியியல் நிலைமைகள் இறுக்கமாக்கப்பட்டதன் காரணமாக வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சல், குறிப்பாக, ஐக்கிய அமெரிக்காவில் நாணயக் கொள்கை வழமைப்படுத்தல்களை நோக்கமாகக் கொண்டு ஐ.அ.டொலர் வலுப்படுத்தப்பட்டமை அதேபோன்று விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறை என்பனவற்றின் காரணமாக சென்மதி நிலுவை குறிப்பிடத்தக்க அழுத்தங்களுக்குள்ளாகியது. ஏனைய தோற்றம்பெற்று வருகின்ற சந்தைப் பொருளாதாரங்களில் அவதானிக்கப்பட்ட அழுத்தங்களைப் போன்றே இவ்வபிவிருத்திகள் குறிப்பாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் இலங்கை ரூபாவின் மீது கடுமையான தேய்வினை ஏற்படுத்தின. செலாவணி வீதத்தின் ஒழுங்கற்ற சீராக்கங்களைத் தடுப்பதற்காக அந்நேரத்தில் மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட்ட வேளையில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் மட்டத்தினையும் போக்கினையும் நிர்ணயிப்பதற்கு கேள்வி மற்றும் நிரம்பல் விசைகள் அனுமதிக்கப்பட்டன. வெளிநாட்டுத் துறையின் அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கமும் மத்திய வங்கியும் பல குறுங்கால வழிமுறைகளை அறிமுகப்படுத்திய போதும், வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலப்பகுதியில் வர்த்தகப்படுத்தத்தக்க துறையினை உத்வேகப்படுத்துவதற்கும் வணிக மற்றும் பணிகள் ஏற்றுமதிகளை உயர்த்துவதற்கும் அமைப்பியல் சீராக்கங்களின் தேவையை மீண்டும் ஒரு முறை துலாம்பரமாக எடுத்துக்காட்டின. வெளிநாட்டுத் துறையும் 2018இன் பிற்பகுதியில் அரசியல் உறுதிப்பாடற்ற தன்மையின் காரணமாகப் பாதிக்கப்பட்டது. அரசியல் அபிவிருத்திகள் தேர்தலுக்கு இட்டுச்செல்லும் இறை நழுவல்கள் தொடர்பிலான கரிசனைகளுடன் சேர்ந்தமை என்பன இலங்கையின் நாட்டிற்கான தரமிடல் அனைத்து மூன்று முக்கிய தரமிடல் முகவர்களும் குறைத்துத் தரமிடுவதற்கு குறிப்பிடத்தக்க ஒதுக்குக் காரணிகளாக அமைந்தன. இதன் காரணமாக முதலீட்டாளர்களின் நம்பிக்கை எதிர்மறையாகப் பாதிக்கப்பட்டது. எனினும், பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் அல்லது அடிப்படைகளில் மோசமான தன்மை ஏற்பட்டமைக்கான திடமான சான்றுகளெதுவும் காணப்படாமையினால் நிச்சயமற்ற

அரசியல் நிலைமைகள் மற்றும் உண்மையான இறை நழுவல்களை விட எதிர்பார்க்கப்பட்டவை கூடுதலாக இருந்தன. காரணமாக அத்தகைய தரமிடல் குறைப்பிற்கு நியாயப்படுத்தல்கள் எதனையும் காணமுடியவில்லை. 2018 ஒத்தோபர் 26 வரை பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐந்தாவது மீளாய்வு நிறைவு செய்யப்பட்டமையின் மூலமான சிறந்த முன்னேற்றம் இதற்குச் சான்றாக இருந்தது. இலங்கை பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொடர்ந்தும் உதவிகளை பெற்றுவருவதுடன் நாங்கள் 2018 யூனில் நிகழ்ச்சித்திட்டத்தின் ஐந்தாவது தொகுதியினையும் பெற்றிருக்கிறோம். நாங்கள் 2019இல் பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்க நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கிறோம். ஐந்தாவது மீளாய்வு தொடர்பான பன்னாட்டு நாணய நிதியத்துடன் கோட்பாட்டு ரீதியாக அடையப்பட்ட அலுவலர் மட்டத்திலான உடன்படிக்கை, அடுத்த கட்டத்திற்கு தொடருமென்ற நம்பிக்கையை நாம் கொண்டிருக்கிறோம்.

அரசாங்கம் இறைத் திரட்சியை நோக்கிய அதன் முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்ட போதும் இறைத் துறையின் செயலாற்றம் 2018இல் மிகவும் கலப்புற்றதாகவே காணப்பட்டது. எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் குறைவான அரசிறைச் சேகரிப்பு 2018 இற்காக இலக்கிடப்பட்ட வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையினை எய்துவதில் சவால்களை ஏற்படுத்தும் போல் தோன்றுகிறது. எனினும், ஆரம்ப நிலுவை 2018இலும் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக மிகையினைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது 1955 இற்குப் பின்னர் மூன்றாவது தடவையாகும். தொடர்ச்சியான இறைத் திரட்சி இறைத் துறையில் ஏற்கனவே அடையப்பட்ட சாதனைகளின் மீது கட்டியெழுப்ப வேண்டியிருப்பது இன்றியமையாதது என்பதுடன் ஏதேனும் இறைப் பின்வாங்குதல்கள் இல்லாமல் நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகளை நடாத்துவதற்கும் உதவுகிறது.

எமது கடந்த ஆண்டு வழிகாட்டலில் அறிவிக்கப்பட்டவாறு, மத்திய வங்கி 2020ஆம் ஆண்டு அதன் புதிய நாணயக் கொள்கைக் கட்டமைப்பிலுள்ளவாறு நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலை நடைமுறைப்படுத்துவதனை நோக்கி முன்னேற்றம் கண்டு வருகிறது. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலுக்கு நிலைமாறிச் செல்வதற்கு வசதியளிக்கும் விதத்தில் நாம் பல கொள்கை முன்னெடுப்புக்களை மேற்கொண்டிருக்கிறோம். அரசாங்கத்துடன் பொருத்தமான கொள்கை இணைப்புக்களைப் பேணி வருகின்ற அதேவேளை தாழ்ந்த பணவீக்கத்தினைப் பேணுவதற்கு மத்திய வங்கியின் பொறுப்பாண்மையினை வலுப்படுத்துவதற்காக

தேவையான சட்டத் திருத்தங்களை வரைவதனையும் நாம் முன்னெடுத்திருக்கின்ற அதேவேளையில் மத்திய வங்கியின் சுயாதீனம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையையும் வலுப்படுத்தி வருகிறோம்.

2018ஆம் ஆண்டுப்பகுதியில் குறைவடைந்த **பேரண்ட முன்மதியுடைய கரிசனைகளுடன் உறுதியான நிதியியல் முறைமையினைப் பேணும் நோக்குடன் பல கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தக் கூடியவர்களாகவும் நாம் இருந்த அதேவேளையில்,** உலகளாவிய மற்றும் உள்நாட்டு அதிர்வுகளுக்கும் நிதியியல் முறைமை தாக்குப்பிடிப்பதனை அதிகரித்திருக்கிறோம். நிதியியல் நிறுவனங்களின் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்தும் பொருட்டு புதிய வங்கித்தொழில் சட்டம் வரையப்பட்டு வருகின்ற அதேவேளையில் நிதியியல் துறையுடன் தொடர்புபட்ட ஏனைய சட்டவாக்கங்களுக்கு திருத்தங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வியாபாரத்தின் மீது கட்டுப்பாடுகளை விதித்தல், இடைநிறுத்தல் மற்றும் உரிமங்களை இரத்துச் செய்தல் போன்ற கடுமையான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் போன்ற வடிவங்களில் இடர்ப்பாட்டிலுள்ள கம்பனிகளுக்கெதிராக தீர்மான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மூலதனத் தேவைப்பாடுகளின் உறுதியான அதிகரிப்புக்களை மேற்கொள்வதனூடாக வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லாத் துறைகள் இரண்டிலும் திரட்சிகள் ஊக்குவிக்கப்படும். ஒழுங்கான முறையொன்றில் வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லாத் துறை இரண்டிலும் உறுதியான அமைப்பியலை அடையும் விதத்தில் முன்னுரிமைகள் வழங்கப்படும். ஒழுங்குமுறைப்படுத்தல் தேவை மறுத்தல்கள் எதுவுமில்லையென சாத்தியமானளவிற்குத் தெளிவான சமிக்ஞைகளை அனுப்ப நாம் எண்ணுகிறோம்.

நாட்டின் வளர்ந்துவரும் கொடுப்பனவுத் தேவைகளுக்கு பணியாற்றும் இயலளவினைக் கொண்ட வினைத்திறனும் உறுதியும் கொண்ட தேசியக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையொன்றினை அபிவிருத்தி செய்கின்ற எமது நியதிச் சட்ட பொறுப்பாண்மைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகளை நாம் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறோம். நாட்டில் டிஜிட்டல் கொடுப்பனவுப் பொறிமுறையினை மேம்படுத்துவதற்காக 2018ஆம் ஆண்டுப்பகுதியில் கியுஆர் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுகள் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் தேசிய அட்டைத் திட்டத்தினை நிறுவுவதில் முன்னேற்றங்கள் அடையப்பட்டன. பொருளாதாரத்தில் சுமுகமான கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிப்பதற்காக நாணய முகாமைத்துவத் தொழிற்பாட்டினையும் மத்திய வங்கி தொடர்ந்தும் செயற்படுத்தியது.

2018இலும் மத்திய வங்கி முகவர் தொழிற்பாடுகளை வலுப்படுத்துவதற்கு முன்னுரிமையளித்தது. பொதுப்படுகடன் முகாமைத்துவம் அரசின் நிதியிடல் தேவைப்பாடுகளை சாத்தியமானளவிற்குக் குறைந்த செலவில் பூர்த்திசெய்யும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட வேளையில் படுகடன் உறுதியானதொரு அடிப்படையில் பேணப்பட்டது. அரச பிணையங்களுக்கான ஏல முறைமைகளின் வெளிப்படைத்தன்மையினையும் வினைத்திறனையும் வலுப்படுத்துவது தொடர்பிலும் நடுத்தர காலப் படுகடன் முகாமைத்துவ உபாயங்களை அபிவிருத்தி செய்வதிலும் தொடர்ந்தும் கவனம் செலுத்தப்பட்டது. அரசாங்கத்தின் ஆலோசனையுடன் புதிதாக இயற்றப்பட்ட தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தின் அடிப்படையில் எதிர்காலப் படுகடன் கடப்பாடுகள் மற்றும் பெறுகைகளின் மீது பொறுப்பு முகாமைத்துவ நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறோம்.

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க செலாவணிச் சட்டத்தின் அறிமுகப்படுத்தலுடன் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் முன்கூட்டியே தாராளமயப்படுத்தப்பட்டன. முதலீடுகளுக்கான நிதிகளின் சுமூகமான மாற்றல்களுக்காக உள்முக மூலதனப்பாய்ச்சல்களுக்கான நடைமுறைகள் மேலும் எளிமைப்படுத்தப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டுள்ள வேளையில், பரந்தளவில் உலகளாவிய சந்தைகளை உள்நாட்டு முதலீட்டாளர்கள் அணுகுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் தெரிவுசெய்யப்பட்ட துறைகளில் வெளிமுக மூலதனப்பாய்ச்சல்கள் அதிகரிக்கப்பட்டன.

வசதிப்படுத்துநர் என்ற முறையில் மத்திய வங்கி நாட்டில் அனைத்தையுமுள்ளடக்கிய மற்றும் ஏற்றத்தாழ்வற்ற பொருளாதார வளர்ச்சியையும் நிதியியல் உள்ளடக்கத்தினையும் அதிகரிக்கின்ற பரந்த நோக்குடன் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் அதன் அபிவிருத்தி நிதி மற்றும் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. தேசிய நிதியியல் உள்ளடக்க உபாயத்தினை வடிவமைப்பதில் முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது. மேலும், பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கான நிதியிடலை ஒழித்தல் ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கையின் உலகளாவிய நிலையினை மேம்படுத்தும் நோக்குடன் மத்திய வங்கி பணியாற்றியதுடன் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் நாம் பல அரச சபைகளுடனும் நிறுவனங்களுடனும் பல புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டிருக்கிறோம். நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் ‘‘சாம்பல் நிற பட்டியலிலிருந்து’’ 2019 அளவில் இலங்கையை மீட்பதனை நோக்கி நாம் பணியாற்றி வருகின்றோம்.

பாரியளவான பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மையினை பின்பற்றுவதில் பல எண்ணிக்கையான வழிமுறைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, திறைசேரி முறிகளை வழங்குதல் தொடர்பாக பரீட்சித்துப்பார்க்கும் மற்றும் புலனாய்வு செய்யும் சனாதிபதி புலனாய்வு செய்யும் சனாதிபதி ஆணைக்குழுவின் விதந்துரைகளை தொடர்ந்து, மத்திய வங்கிக்கு ஏற்புடைய பல சட்டங்களை வலுப்படுத்துவதற்கும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசாங்கப் பிணையங்கள் வழங்குவதுடன் தொடர்புபட்ட தொழிற்பாடுகளை மறுசீரமைப்பதற்கும், ஊழிய சேம நிதிக்கான புதிய முதலீட்டு கொள்கை கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்துவதற்கும், உள்ளகக் கணக்காய்வினை வலுப்படுத்துவதற்கும் ஊழியர்களுக்கும் நாணயச் சபையின் உறுப்பினர்களுக்கும் நன்நடத்தைக் கோவையினை அறிமுகப்படுத்துவதற்கும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. பல தடயவியல் கணக்காய்வுகளுக்கான பெறுகைச் செயன்முறை முன்னெடுக்கப்படுவதுடன் தடயவியல் கணக்காய்வு உலகளாவிய நடைமுறைகளுடன் நிறுவனங்கினால் நடாத்தப்படவுள்ளன.

சவால்மிக்க உலகளாவிய மற்றும் உள்நாட்டுச் சூழலில் சாத்தியமான இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கும் அதன் பரந்த குறிக்கோளான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு, நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பனவற்றை அடைவதற்கும் மத்திய வங்கி அதன் கொள்கைக் கட்டமைப்பினை உறுதியான அடிப்படையில் மேம்படுத்தி வருகிறது. குறிப்பிட்ட நிபந்தனைகளைக் குறிப்பாக, பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கான அரசாங்கத்தின் கடப்பாடுகளை பூர்த்தி செய்யப்படுமிடத்து மாத்திரமே எமது நடவடிக்கைகள் காத்திரமானவையாகவும் விரும்பத்தக்கப் பெறுபேறுகளை வழங்கக்கூடியதாகவுமிருக்கும். தற்போது நிலவுகின்ற குறைந்த வளர்ச்சி வேகத்தினைக் கருத்திற்கொள்கையில், இறைத்திரட்சிச் செயன்முறைகளைப் பாதிக்காத விதத்தில் தனியார் துறையின் தீவிரமான பங்கேற்புடன் வளர்ச்சியை ஊக்குவிக்கும் கொள்கைகளும் அமைப்பியல் சீர்திருத்தங்களும் அரச துறையிடமிருந்து பெருமளவிற்குத் தேவைப்படுகின்றன.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்ட அரசாங்கத்தின் முன்முயற்சிகள், உற்பத்தித்திறனை உயர்த்துதல், தொழிற்படையின் தேர்ச்சி மட்டங்களை உயர்த்துதல் அதேபோன்று உள்நாட்டு உற்பத்தி இயலளவினை விரிவுபடுத்துதல் என்பன பொருளாதார வளர்ச்சியின் நியாயமானதும் நீடித்துநிலைத்திருக்கக்கூடியதுமான மட்டத்திற்கு ஆதரவளிப்பதற்கு இன்றியமையாத மூலங்களாக விளங்குகின்ற வேளையில், குறைந்த பணவீக்கச் சூழலொன்று தொடர்ந்தும் பேணப்பட்டு வருகின்றது. முரண்படாத விதத்தில் நிலையானதும் இணைப்புக்களைக்

கொண்டதுமான கொள்கைகளை உரிய நேரத்தில் அறிமுகப்படுத்துவது அத்தகைய கொள்கைகளின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைவதனை உறுதிப்படுத்துவதற்கு இன்றியமையாதனவாகும். இப்பின்னணியில் இவ்வழிகாட்டல், அரசாங்கத்தினதும் தனியார் துறை ஆர்வலர்களினதும் ஆதரவுடன் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை எய்துவதற்கு வலுவான கொள்கைகள் மற்றும் நம்பகமான கட்டமைப்பிற்கான அடிப்படையினை உருவாக்குவதற்கு எண்ணுகிறது.

இதன்படி வழிகாட்டல் 2019இன் மேலோட்டமான தன்மைகள் பின்வருமாறு:

**பிரிவு 2:** 2019இற்கும் அதற்கு அப்பாலுக்குமான மத்திய வங்கியின் நாணயக் கொள்கை உபாயம் மற்றும் கொள்கைகள்

**பிரிவு 3:** 2019இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நிதியியல் துறைச் செயலாற்றம் மற்றும் உறுதிப்பாட்டுடன் தொடர்பான மத்திய வங்கியின் கொள்கைகள்

**பிரிவு 4:** மத்திய வங்கியின் முகவர் மற்றும் துணைத் தொழிற்பாடுகளினூடாக பரந்த பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதுடன் தொடர்பான முக்கிய கொள்கைகள்

இப்பொழுது நான் இப்பிரிவுகளை விபரமான விதத்தில் விளக்க முற்படுகிறேன்.

## 2. 2018 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நாணயக் கொள்கை உபாயமும் கொள்கைகளும்

மத்திய வங்கி நடுத்தர காலத்தில் தாழ்வானதும் உறுதியானதுமான மட்டங்களில் பணவீக்கத்தினைப் பேணுகின்ற நோக்கத்துடன் அதிகளவிற்கு முன்னோக்கிய நோக்குடன் **நாணயக் கொள்கையினை** மேற்கொள்வதன் மூலம் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த வளத்தினை அடைவதற்கு ஆதரவளிக்கின்றது.

விரைவாக வளர்ந்து மோசமான உலகளாவிய நிலைமைகள் அதேபோன்று உள்நாட்டுப் பக்கத்தில் காணப்படும் பல மேல் நோக்கிய மற்றும் கீழ் நோக்கிய இடர்நேர்வுகள் என்பனவற்றுடன் கூடிய சவால்மிக்க சூழ்நிலையொன்றில் மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கையினை மேற்கொண்டு வருகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் வட்டி வீத உயர்வுகளின் பின்னணியில், உலகளாவிய பொருளாதாரத்தில் காணப்படும் புதிய அபிவிருத்திகள் மற்றும் பெரும்பாலான முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் பொருளாதார வழமைப்படுத்தல் என்பன உலகம் முழுவதிலுமுள்ள நாணய மேலாண்மைகள் அவற்றின் நாணயக் கொள்கைகளை இவற்றிற்கேற்ப சீராக்கிக் கொள்ளுமாறு வலியுறுத்துகின்றன. இலங்கை மத்திய வங்கியும் மூலதன வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் விரிவடைந்துவரும் வர்த்தகப் பற்றாக்குறை என்பனவற்றின் காரணமாக நாணயத்தின் மீதான தேய்வு அழுத்தம், குறைவான பொருளாதார வளர்ச்சி, நாணயக் கூட்டுக்களினதும் கொடுகடனினதும் மெதுவான போக்கு, பணவீக்கத்தின் மிதமான மட்டங்கள், நாணயச் சந்தையில் தொடர்ச்சியாகக் காணப்படும் பற்றாக்குறை, திரவத்தன்மை நிலைமைகள் என்பனவற்றின் காரணமாக நாணயத்தின் மீதான தேய்வு அழுத்தங்கள் போன்ற உள்நாட்டு அபிவிருத்திகளை தொடர்ச்சியாகப் பரிசீலிக்க வேண்டியிருந்தது.

நியதி ஒதுக்கு விகிதம் மற்றும் கொள்கை வட்டி வீதங்களை உயர்த்தியதன் மூலம் 2015 இறுதியிலிருந்து மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை நிலை குறிப்பாகக் கேள்வியினால் தூண்டப்பட்ட பணவீக்கம் மற்றும் நாணய மற்றும் கொடுகடன் கூட்டுக்களின் போக்குகள் 2016 மற்றும் 2017 உடன் ஒப்பிடுகையில் விரும்பத்தக்க விளைவுகளை கொண்டிருந்தன. குறைந்த வளர்ச்சிச் சூழ்நிலையொன்றில் குறிப்பாக, பணவீக்கம், பணவீக்கத் தோற்றப்பாடுகள் மற்றும் நாணயத் துறையின் போக்குகளில் காணப்பட்ட சாதகமான அபிவிருத்திகள், துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினை 25 அடிப்படைப் புள்ளிகளினால் குறைப்பதன் மூலம் 2018 ஏப்பிறல் தொடக்கத்தில் இறுக்கமான சுழற்சி வட்டத்தை முடிவிற்குக் கொண்டுவரும்

சமிக்ஞைகளை எடுப்பதற்கு மத்திய வங்கியைத் தூண்டின. இருப்பினும்கூட, உலகளாவிய பொருளாதார நிலைமைகள் மற்றும் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தம் என்பன 2018 ஏப்பிறலிலிருந்து சமநிலையான நாணயக் கொள்கை நிலையொன்றினைப் பேணுவதற்கு மத்திய வங்கியை நிர்ப்பந்தித்திருக்கிறது.

நாணயக் கொள்கையினை மேற்கொள்வதற்கு சந்தையை அடிப்படையாகக் கொண்ட கொள்கைக் கருவிகள், குறிப்பாக கொள்கை வீதங்கள் மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட வேளையில், நியதி ஒதுக்கு விகிதம் நிரந்தர அடிப்படையில் சந்தைக்கு திரவத்தன்மையை உள்ளீடு செய்வதற்கான கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டது. ரூபாத் திரவத்தன்மையில் காணப்பட்ட பாரியதும் விடாப்பிடியானதுமான பற்றாக்குறையினைக் கருத்திற்கொண்டு வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்கள் மீதுமான ஏற்புடைத்தான நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளை 2018 நவெம்பரில் 7.50 சதவீதத்திலிருந்து 6.00 சதவீதத்திற்குக் குறைப்பதற்கு நாணயச் சபை தீர்மானித்தது. நியதி ஒதுக்கு விகிதத்தில் செய்யப்பட்ட குறைப்பு வங்கித்தொழில் முறைமைக்கு கணிசமானளவு ரூபாத் திரவத்தன்மையினை விடுவித்தது. இது வட்டி வீதங்களையும் கூட்டுக்கேள்வியையும் குறைவடைவதற்கு வழிவகுத்திருக்கக்கூடும். ஆகவே, நியதி ஒதுக்கு விகிதக் குறைப்பின் தாக்கத்தினை சமநிலைப்படுத்தும் பொருட்டும் சமநிலையான நாணயக் கொள்கை நிலையினைப் பேணும் பொருட்டும் மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை சமகாலத்தில் உயர்த்தியது.

நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலை நோக்கி நிலைமாறிச் செல்லும் அறிவித்தலினைத் தொடர்ந்து நாம் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு துறைகளிலிருந்து உருவாகிய பல்வேறுபட்ட கேள்வி மற்றும் நிரம்பல் அதிர்வுகளின் காரணமாக அவ்வப்போது உயர்வு மற்றும் தாழ்வுப் போக்குக் காணப்பட்டமைக்கிடையிலும் தாழ்ந்த மட்டப் பணவீக்கத்தினைப் பரந்தளவிற்கு எம்மால் பேண முடிந்தது. பல பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகளின் ஆதரவுடனான முன்மதியுடைய மற்றும் முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த நாணயக் கொள்கை வழிமுறைகளிலிருந்தான நன்மைகளின் மூலம் நாணய விரிவாக்கம் விரும்பத்தக்கதொரு மட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்டதன் மூலம் 2018இல் குறைந்தமட்டப் பணவீக்கத்தினைப் பேண முடிந்தது.

நீங்கள் எல்லோரும் அறிந்தவாறு, தொடர்ச்சியாக ஒரு தசாப்த காலமாக பணவீக்கத்தினை ஒற்றை இலக்க மட்டத்தில் தொடர்ச்சியாகப் பேணுகின்ற அப்பழுக்கற்ற பதிவேட்டினை மத்திய வங்கி கொண்டிருக்கிறது. இது மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்கு நீடித்துநிலைத்திருக்கும் விரைந்த பொருளாதார வளர்ச்சியை

எய்துவதற்கு பொருளாதாரத்திற்கான இயலுமைப்படுத்தும் சூழ்நிலையை உருவாக்குவதற்கு விலை உறுதிப்பாடு மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்ற மத்திய வங்கியில் வலுவான கடப்பாட்டினைக் காட்டுகிறது. எதிர்காலத்தில் நாம் எதிர்நோக்கக்கூடிய உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சவால்களைக் கருத்திற்கொள்ளாது தாழ்ந்த பணவீக்கத்தின் சாதனையினைப் பேணும் விதத்தில் நாம் தொடர்ந்தும் முன்னேற வேண்டும்.

விரைவாகப் பரிணாமமடைந்து வருகின்ற அதிகளவு நிச்சயமற்ற தன்மைப் பண்புகளைக் கொண்ட சூழலுக்கு மத்தியிலும் நிலையானதொரு விலை உறுதிப்பாட்டினை வழங்குவதற்கான மத்திய வங்கியின் இயலாற்றலை வலுப்படுத்துகின்ற நோக்குடன் நாணயக் கொள்கைக் கட்டமைப்பினைத் தரமுயர்த்துவதற்கான பணியினை மத்திய வங்கி ஆரம்பித்தமைக்கு இதுவே முக்கிய காரணமாகும். 2018ஆம் ஆண்டுப்பகுதியில், வலுவான மத்திய வங்கி பொறுப்பாண்மையினை நிறுவுவதனையும் காத்திரமான இறை நாணய இணைப்புக்களைக் கட்டியெழுப்புவதனையும் தொழில்நுட்ப மற்றும் நிறுவன ரீதியான இயலளவு என்பனவற்றினை மேலும் மேம்படுத்தும் நோக்குடன் நாணய விதிச் சட்டத்திற்குத் தேவையான திருத்தங்களை முன்னெடுக்கின்ற நியதிகளில் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலை நோக்கி நிலைமாறிச் செல்வதில் கணிசமான முன்னேற்றங்கள் அடையப்பட்டன.

நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலை நோக்கிய முன்னேற்றங்கள் தொடர்பில் ஒரு சில முக்கியமான துறைகளை விளக்குவதற்கு என்னை அனுமதிப்பீர்கள் என நம்புகிறேன். கடந்த ஆண்டு விலை உறுதிப்பாட்டுடன் தொடர்பான மத்திய வங்கியின் முக்கிய இலக்குகளை ஆற்றுவதற்கு அதன் தற்போதைய பொறுப்பாண்மையினை வலுப்படுத்துவதற்கான தேவையினையும் முக்கியத்துவத்தினையும் நாம் எடுத்துக்காட்டியிருந்தோம். வலுவான சட்டப் பொறுப்பாண்மை முழுக் கட்டமைப்பினையும் ஒன்றாக பிடித்துவைத்திருக்கின்ற அச்சாணியாகக் கருதப்படுவதனால் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலை வெற்றிகரமாகப் பின்பற்றுவதற்கான மிக இன்றியமையாத முற்தேவைப்பாடாகப் பரந்தளவிற்கு இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மத்திய வங்கியின் ஆளுகையினை முன்னேற்றுவதற்கும் நிதியியல் துறை மேற்பார்வையினை வலுப்படுத்துவதற்கும் இறை நாணய இணைப்புக்களை உத்வேகப்படுத்துவதற்குமான ஏனைய திருத்தங்களுக்குப் புறம்பாக, குறிப்பாக, மத்திய வங்கியின் சுயாதீனத்தினை வலுப்படுத்துவதற்கும் நாணயக் கொள்கைக் கட்டமைப்பொன்றாக நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலைப் பின்பற்றுவதற்கு வசதியளிப்பதற்குமான துறைகளில் நாணய விதிச் சட்டத்திற்கான

அனைத்தையுமுள்ளடக்கிய திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டமை முக்கியமானதொரு நடவடிக்கையாகும். இதன்படி, மத்திய வங்கி நாணய விதிச் சட்டங்களுக்கான திருத்தங்களை வரைகின்ற இறுதிக்கட்டத்தில் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து சட்ட நிபுணர்களின் உதவியைப் பெற்றுக்கொண்டது. மேலும், இது நாணயக் கொள்கையுடன் தொடர்பான அதிகாரம் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான எல்லைகளைத் தெளிவாக வரையறுத்துக் கொள்வதன் மூலம் மையமல்லா மற்றும் போலி இறை நடவடிக்கைகள் நாணய நிதியிடல் அதேபோன்று மத்திய வங்கியின் சுயாதீனத்தினை வலியுறுத்தும் போன்ற நீண்ட காலக் கரிசனைகளைக் கட்டுப்படுத்தும் வேளையில் விலை உறுதிப்பாடு மத்திய வங்கியின் முக்கிய குறிக்கோள்களின் அந்தஸ்திற்கு உயர்த்தப்படும். திருத்தப்பட்ட சட்டவாக்கம் பணவீக்க இலக்கிடல்களை நிர்ணயிப்பதற்கான நிறுவன ரீதியான ஒழுங்குகளுக்கும் நாணயத் தொழிற்பாடுகளை அதேபோன்று பேரண்ட முன்மதியுடைய கருவிகளையும் மேம்படுத்துவதற்கும் வசதியளிக்கும். இச்சட்டவாக்கத் திருத்தங்கள் பொறுப்பாண்மையின் ஒட்டுமொத்தக் கவனத்தினையும் மேம்படுத்துவது மட்டுமன்றி மத்திய வங்கியின் அதிகரித்த ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் சுயாதீனம் அதேபோன்று பெருமளவு பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பனவற்றினூடாக மத்திய வங்கியின் நம்பகத்தன்மையினையும் உத்வேகப்படுத்தும். திருத்தப்பட்ட நாணய விதிச் சட்டத்தினை அமைச்சரவை மற்றும் பாராளுமன்ற ஒப்புதலுக்காக இவ்வாண்டில் சமர்ப்பிப்பதற்கு நாம் எதிர்பார்க்கிறோம்.

நெகிழ்ச்சத்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலை நோக்கிய எமது நிலைமாற்றுத் தன்மையின் முக்கியமான இன்னொரு மூலம் யாதெனில் முன்னோக்கிய நாணயக் கொள்கை நடத்தைக்கான திடமான கட்டமைப்பொன்றினை நிறுவுவதற்காக எமது அலுவலர்களின் தேர்ச்சி, இயலாற்றல் மற்றும் இயலளவு அதேபோன்று முறைமைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துவதாகும். நாணயக் கொள்கைத் தீர்மானத்தினை மேற்கொள்கின்ற செயன்முறையினை முன்னேற்றுவதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய அமைப்பியல் மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமைகளை அபிவிருத்தி செய்வதற்காக நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பன்னாட்டு நாணய நிதியத்துடன் நாம் ஒரு பங்காளராக இருந்தபொழுது இம்முன்னேற்றத்தினை நோக்கி முக்கிய அடியினை எடுத்துவைத்தோம். இது தொடர்பில் கணிசமான முன்னேற்றங்கள் அடையப்பட்டிருக்கின்றன் மத்திய வங்கியின் மாதிரிப்படுத்தல் மற்றும் எதிர்வுகூறலின் இயலளவில் நாம் குறிப்பிடத்தக்க பலன்களை அடைந்திருக்கின்றோம். இதன் மூலம் முன்னோக்கிய நாணயக் கொள்கைத்

தீர்மானங்களை எடுக்கின்ற செயன்முறையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரிப்படுத்தல் கட்டமைப்பின் விபரங்கள் தற்பொழுது பொதுமக்களின் முன்னிருக்கிறது. முன்னோக்கிப் பார்க்கையில் மத்திய வங்கி தொழில்நுட்ப இயலளவினையும் உட்கட்டமைப்பினையும் மேலும் மேம்படுத்துவதனையும் நோக்கி மூலவளங்களை பயன்படுத்துவதன் மீது முக்கிய கவனத்தினைச் செலுத்தும். இது பேரண்ட பொருளாதார பகுப்பாய்விற்கான உரிய நேரத்தில் அமைந்த நம்பகமான மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட எறிவுகளை உருவாக்குவதற்கு உதவும். மத்திய வங்கி நாணயக் கொள்கைப் பகுப்பாய்வுகளுக்கு உதவும் விதத்தில் பல புதிய அளவீடுகளை மேற்கொள்வதற்கும் பரந்தளவிலான புதிய குறிகாட்டிகளைத் தொகுப்பதற்கும் ஏற்கனவே திட்டமிட்டிருக்கிறது. தற்போதுள்ள தரவுச் சேகரிப்புக்களை, திரட்டும் முயற்சிகளை, மேம்படுத்துவதில் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். இவை, நேரகாலத்துடன் எச்சரிக்கை விடுக்கும் குறிகாட்டிகள், விலைச் சுட்டெண்கள், கூடியளவிற்குக் கவனம் எடுக்க வேண்டிய தேவை காணப்படும் துறைகளுக்கு உற்பத்தியாளர் முகாமைத்துவச் சுட்டெண் அளவீட்டினை விரிவுபடுத்தல் மற்றும் அநேக டிஜிட்டல் மயப்படுத்தும் முன்னெடுப்புக்கள் என்பனவற்றுடன் தொடர்பான பல உற்பத்திப் போக்குகளை உள்ளடக்கியிருக்கும். நாம் வீட்டலகுகளின் துறையில் பணவீக்க எதிர்பார்ப்புக்களின் உள்ளடக்கத்தினையும் மதிப்பினையும் மேம்படுத்தும் நோக்குடன் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை வலையமைப்பினூடாக கொழும்பு மாவட்டத்திற்கு அப்பாலும் வீட்டலகுகள் துறை பணவீக்க எதிர்ப்புக்கள் அளவீட்டினை மேலும் விரிவாக்குகின்ற செயன்முறையில் ஈடுபட்டிருக்கிறோம்.

அநேக சந்தர்ப்பங்களில் நாம் எடுத்துக்காட்டியிருக்கின்றவாறு, நிலையானதும் வலுவானதுமான கடப்பாடுகளும் அரசாங்கத்திடமிருந்தான ஆதரவும் நாணயக் கொள்கைக்கான கட்டமைப்பொன்றாக நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலை மேற்கொள்வதற்கு மிக இன்றியமையாததாகும். இலங்கைக்கான சுபீட்சம் மிக்க நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலை அரசாங்கம் அங்கீகரித்திருப்பதனை கவனிக்கும் பொழுது மகிழ்ச்சி தருவதாக இருப்பதுடன் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்தில் இறைத்திரட்சியை இலக்காகக் கொண்ட கொள்கைகளை அரசாங்கம் பின்பற்றியது. அரச அரசிறையினை உயர்த்துவதனை நோக்கமாகக் கொண்ட இறைத்திரட்சியினை அடிப்படையாகக் கொண்ட அரசிறை மீதான அரசின் முயற்சிகளை நாம் வரவேற்கின்ற அதேவேளையில் அரசின் செலவினம் சிக்கனப்படுத்தப்படுகிறது. புதிய உள்நாட்டு அரசிறைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவது அரச அரசிறை நிருவாக முகாமைத்துவத் தகவல்

முறைமையினை முதற்தடவையாக பயன்படுத்துவதன் மூலம் வரி நிருவாகத்தினை மேம்படுத்துவது மற்றும் வரி இணங்குவிப்புக்களை மேம்படுத்துவது என்பன அரசிறையினை அதிகரிப்பதற்கான சாதனங்களாக இருக்கும். மேலும், வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களுக்குள்ளாகும் தன்மையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் செலவினத்தினைச் சிக்கனப்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகள் 2018ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டம் இயற்றப்பட்டமையினூடாக பொதுப்படுகடன் முகாமைத்துவம் வலுப்படுத்தப்பட்டமை மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்குத் தேவையான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியமை அதேபோன்று நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ உபாயங்களை மீளவலுப்படுத்துதல் என்பன அரசாங்கத்தின் ஊக்கம் தரும் நடவடிக்கைகளாகும்.

மற்றைய நாடுகளின் அனுபவங்களைப் போன்றே, நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பில் பணவீக்க இலக்கிடலானது அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் கூட்டாகத் தீர்மானிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, இறைக் கொள்கைக்கும் நாணயக் கொள்கைக்குமிடையில் இணக்கமற்ற தன்மை இருக்கக்கூடாது என்பதனால் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பு இவ்விரண்டு நிறுவனங்களும் ஒன்றாகப் பணிபுரிய வேண்டுமெனத் தேவைப்படுத்துகிறது.

மத்திய வங்கி, பணச் சந்தையில் திரவத்தன்மையினை முகாமைப்படுத்துவதற்காக தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இதன் மூலம் இலக்கிடப்பட்ட வீச்சிற்குள் பணவீக்கத்தினை வழிப்படுத்துவதற்கு முக்கிய தொழிற்பாட்டு இலக்காக விளங்கும் குறுங்காலச் சந்தை வட்டி வீதங்கள் வழிப்படுத்தப்படுகின்றன. குறுங்கால சந்தை வட்டி வீதங்களை உறுதிப்படுத்துவதற்கு சந்தைத் திரவத்தன்மையினை முகாமைப்படுத்துவதற்கான ஒரு உபாயமாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் விளங்குகின்றனவேயன்றி சில பகுப்பாய்வாளர்களினால் பிழையாக விளக்கமளிக்கின்றவாறு மத்திய வங்கியினால் திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்யப்படுவது அல்லது வைத்திருக்கப்படுவது புதிய பணம் அச்சிடப்படுவதற்கான ஒரு பொறிமுறையல்ல என்பதனை நான் வலியுறுத்திக் குறிப்பிட விரும்புகின்றேன். மத்திய வங்கிகளினால் பெருமளவிற்குப் பயன்படுத்தப்படுகின்ற அத்தகைய திறந்த சந்தைத் தொழிற்பாடுகளிடையே தெளிவான வேறுபாடொன்று உருவாக்கப்படல் வேண்டுமென்பதுடன் அரசாங்கத்தின் சார்பில் வழங்கப்படும் திறைசேரி உண்டியல்களை மத்திய வங்கி கொள்வனவு செய்வதனூடாக இறைப் பற்றாக்குறை

நாணயமாக்கப்படுகிறது. மேலும், சந்தைப் பங்கேற்பாளர்களுக்குக் கூடுதலான தகவல்களை வழங்குவதற்காக நாம் பல வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியிருக்கிறோம். இதன் மூலம் நிதியியல் சந்தைகளில் வினைத்திறன்மிக்க விலை கண்டறியும் செயன்முறைக்கு வசதியளிக்கப்படுகிறது. மத்திய வங்கியினால் ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பு முறைமை 2018 சனவரியில் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறைமையானது அழைப்புப் பணம் அரச பிணையங்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளின் என்பனவற்றின் அழைப்புக்களிலிருந்து இன்றியமையாத சந்தைத் தகவல்களைப் பெற்றுக்கொள்கிறது. நாளாந்த திரவத்தன்மை மதிப்பீடானது மத்திய ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைக் கண்காணிப்பு முறைமையினூடாக திரவத்தன்மை அறிக்கையிடல் முறைமையின் நடைமுறைப்படுத்தலுடன் மேலும் மேம்படுத்தப்பட்டது. மேலும், திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏலங்களின் சமிக்ஞைகளை பலப்படுத்தும் நோக்குடன் பணச் சந்தைகளில் திறந்த சந்தை ஏலங்களில் பங்கேற்பதிலிருந்து வங்கியல்லா முதனிலை வணிகர்களைக் கட்டுப்படுத்தியதன் மூலம் கொள்கைத் தலையீடொன்று மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை, மிக அண்மைய கொள்கை வீதச் சீராக்கங்களில் ஓரிரவு வட்டி வீதங்களின் தளம்பல்களை மேலும் குறைக்கும் நோக்குடன் நாம் கொள்கை வீத வீச்சினை 100 அடிப்படைப் புள்ளிகளுக்கு குறைத்திருக்கிறோம்.

முன்னோக்கிப் பார்க்கையில், வட்டி வீதங்களுக்குத் தெளிவான சமிக்ஞைகளை வழங்கவும் அழைப்புப் பணச் சந்தையில் தளம்பல்களைக் குறைக்கவும் நாணய நடைமுறைப்படுத்தல் செயன்முறைகளில் வெளிப்படைத்தன்மையினை அதிகரிப்பதற்குமாக தற்போதைய வீச்சு முறைமையொன்றிற்குப் பதிலாக தனியொரு கொள்கை வீத முறைமைக்கான சாத்தியங்களைக் கண்டறியும் செயன்முறைகளில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். அத்துடன் பணச் சந்தையின் சுமூகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் ஒத்துச்செல்லும் விதத்தில் பிணையங்களின் விலையிடல் தொடர்பான உச்சமட்ட கொள்கை மீளாய்வு செய்யப்படும். வட்டி வீத பரஸ்பர பரிமாற்றல் மற்றும் **விநியோகிக்கப்படாத முன்னோக்கிய விடயங்கள்** போன்ற புதிய சாதனங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அனைத்தையுமுள்ளடக்கிய விதத்தில் பணச் சந்தை நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கு நாம் எதிர்பார்க்கிறோம்.

வங்கித்தொழில் துறையின் போட்டித்தன்மையினை மேம்படுத்தும் பொருட்டு மத்திய வங்கியும் கூடியளவிற்கு செலவினைப் பிரதிபலிக்கின்ற மாற்று அடிப்படை அளவுக்குறியீட்டு வட்டி வீதத்தினை அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிட்டு வருகிறது. இது வங்கிகளின் எல்லைச் செலவினை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

நாணயக் கொள்கையை மேற்கொள்வதின் முக்கிய குறிக்கோளிலொன்றாக செலாவணி வீதத்தினை நாம் பரிசீலனையில் கொள்ளாத போதும் **சந்தை அடிப்படையிலான செலாவணி வீதம்** பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினை வசதிப்படுத்தும் முக்கிய கருவியொன்றாகத் தொடர்ந்தும் இருந்து வருகின்றது. இதனை அடையும் விதத்தில் மத்திய வங்கி தொடர்ந்தும் கூடியளவிற்கு சந்தையை அடிப்படையாகக் கொண்ட செலாவணி வீத முறைமையினைப் பின்பற்றுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பில் அதிர்வுகளை ஈர்த்துக் கொள்ளுமொன்றாக செலாவணி வீதம் தொழிற்படுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது. நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல், பணவீக்கத்தின் ஒட்டுமொத்த வீதத்தின் மீது நாணயத் தேய்வின் தாக்கத்தின் சுமையின் மீது தரம்சார் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. முன்னோக்கியதும் முன்கூட்டியதுமான செயற்பாடு சார்ந்ததுமான நாணயக் கொள்கையினைப் பின்பற்றுவதன் மூலம் தேய்வின் செலவினை அதிகரிக்கின்ற தாக்கம் பணவீக்கத்தினை இலக்கிடப்பட்ட வீச்சிற்குள் வைத்திருப்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வட்டி வீத சீராக்கங்கங்களினூடாக கூட்டுக் கேள்வியை முகாமைப்படுத்துவதன் மூலம் எதிரீடு செய்யப்படுகிறது.

இக்கோட்பாட்டின் மூலம் வழிகாட்டப்படுகின்றவாறு, 2015 செத்தெம்பரின் பின்னர் செலாவணி வீதத்தில் பெருமளவு நெகிழ்ச்சித்தன்மையினை நாம் அனுமதித்திருக்கிறோம். எனினும், 2018ஆம் ஆண்டுப்பகுதியில் உலகளாவிய சந்தை நிலைமைகள் குறிப்பாக மூலதன வெளிப்பாய்ச்சல்களில் அதிகரிப்பு, நடைமுறைக் கணக்குகள் மீதான அதிகரித்த அழுத்தம் அதேபோன்று சந்தையின் மிகையான ஊகங்கள் என்பனவற்றிற்கிடையிலும் செலாவணி வீதம் குறிப்பிடத்தக்களவிற்கு தேய்வடைந்தமையை நாம் கண்டிருக்கிறோம். அத்தகைய நேரங்களில் சந்தைகளின் ஒழுங்கான சீராக்கங்களை உறுதிப்படுத்துவது எமக்கு அவசியமாக இருக்கிறது. எனவே, எமது ஒதுக்குகளை அதிகளவிற்குத் தியாகம் செய்யாமல் முன்மதியுடைய விதத்தில் மத்திய வங்கி தலையீடுகளை மேற்கொள்வது அவசியமானதாகக் காணப்பட்டது. இக்கொள்கையானது செலாவணி வீதத்தின் போட்டித்தன்மையினைப் பேணும் விதத்தில் வடிவமைக்கப்பட்டதுடன் நடைமுறைக் கணக்கினை மீள்சமநிலைப்படுத்துவதற்குப் பெருமளவிற்கு உதவுவதன் மூலம் வெளிநாட்டு தாங்கிருப்பொன்றாக வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளைப் படிப்படியாகக் கட்டியெழுப்புவதற்கு உதவியளித்தது.

உலகளாவிய வட்டி வீதங்கள் உயர்வடைந்து வருகின்றமையின் பின்னணியில் வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்கள் குறைவடைந்தமைக்கான காரணமாக, நிதியியல் பாய்ச்சல்களினூடாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை நிதியிடுகின்ற

வேளையில், ஒதுக்குகளைப் பலப்படுத்துவது நாட்டின் இயலாற்றல் சவால்மிக்கப் பணியொன்றாக இருக்கும். நடைமுறைக் கணக்கில் நீடித்த பற்றாக்குறையினை அடையாமலும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் வடிவில் நீண்ட காலப் படுகடனை உருவாக்காத நிதியியல் உட்பாய்ச்சல்களைக் கவர்ந்து கொள்வது நடுத்தர காலத்திலும் நீண்ட காலத்திலும் கூட வெளிநாட்டுத் துறை தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாக இருக்கும். எனவே, ஏற்றுமதிகள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் ஏற்படும் விரைந்த உத்வேகம் கொள்கை வகுப்பாளர்களுக்கு முன்னுரிமை வாய்ந்ததொன்றாக இருத்தல் வேண்டும். இவை இல்லையெனில் வெளிநாட்டுத் துறை குறுங்கால உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிர்வுகளின் பாதிப்புக்களுக்குத் தொடர்ந்தும் உட்பட்டிருக்கும். இம்முயற்சிகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நடைமுறைக் கணக்கும் வலுவான நிதியிடல் கணக்கும் படிப்படியாக மீள்சமநிலையடைவதனை உறுதிப்படுத்துவதற்கு ஐ.அ. டொலர் 2 இலிருந்து 3 பில்லியன் வீச்சிலான வருடாந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பாய்ச்சலுடன் கூடிய குறைந்தபட்சம் 10 சதவீதம் கொண்ட வணிக ஏற்றுமதிப் பொருட்களின் குறிப்பிடத்தக்க வளர்ச்சி, பணிகள் துறையில் காணப்பட்ட ஆரோக்கியமான வருவாய்களின் ஆதரவு மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான தொடர்ச்சியான பங்களிப்புக்கள் என்பன அவசியமானவையாகும். எனவே, இலங்கையின் மூலதனச் சந்தைகளின் மீது முதலீட்டாளர் நம்பிக்கையினை மேம்படுத்துவதற்கும் குறுங்காலத்தில் பாதிக்கப்படும் தன்மைகள் நீண்ட கால அமைப்பியல் குறைபாடுகளுக்கு மாற்றப்படாமலிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கும் நீடித்துநிலைத்திருக்கும் வழிமுறைகள் அவசியமானவையாகும்.

மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கைகள் மாதிரியொன்றினை அடிப்படையாகக் கொண்ட உபாயச் சொத்து ஒதுக்குக் கட்டமைப்பொன்றினைத் தொடர்ந்தும் அடிப்படையாகக் கொண்டிருக்கும். இது, உலக வங்கியின் ஒதுக்கு மதியுரை மற்றும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் ஆதரவுடன் விருத்தி செய்யப்பட்டது. திரவத்தன்மையின் போதுமான மட்டம், அடிப்படை அளவுக்குறியீட்டுடன் ஒப்பிடுகையில் நியாயமான வருவாய் மற்றும் சந்தை நிலைமைகள் அனுமதிக்குமிடத்து மிகையான வருவாய்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் ஏதேனும் தீவிரமான உபாயங்களைக் கண்டறிதல் என்பனவற்றை உறுதிப்படுத்தும் நோக்குடன் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைப்படுத்தப்படுவதனை இம்முறையியல் உறுதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உட்பட அனைத்து ஆர்வலர்களின் நன்மைக்காக பிணையங்கள் ஆணைக்குழுவின் பன்னாட்டு அமைப்புக்களின் கோட்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் மத்திய வங்கி

விலைப் பெறுதிகள் தொடர்பான வீதங்களை அறிமுகப்படுத்துகின்ற செயன்முறையில் ஈடுபட்டிருக்கிறது.

நீங்கள் அறிந்தவாறு, சென்மதி நிலுவையின் மோசமான தன்மை அரசாங்கத்தின் சீர்திருத்த நிகழ்ச்சிநிரலுக்கு ஆதரவு வழங்குதல் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு இலங்கை 2016இல் பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து மூன்றாண்டு விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினைப் பெற்றுக்கொண்டதுடன் ஏற்கனவே நாங்கள் இவ்வசதியின் ஐந்து தொகுதிகளைப் பெற்றிருக்கிறோம். கடந்த ஒரு சில வாரங்களில் அபிவிருத்திகள் தாமதமடைந்த போதும் பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கை ஓரளவு முன்னேற்றங்களை அடைந்தது. நாம் பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டத்தினை இவ்வாண்டில் வெற்றிகரமாக நிறைவு செய்வோம் என நம்புகிறோம். இது குறிப்பாக நாட்டின் வெளிநாட்டுத் துறைக்கு ஆதரவளிக்கின்ற வேளையில் சீர்திருத்தங்கள் முதலீட்டாளர் நம்பிக்கையினையும் பொருளாதாரத்தின் உற்பத்தித்திறனையும் உத்வேகப்படுத்த உதவும். இவை பொருளாதாரத்தின் வளர்ச்சியை அதிகரிக்கின்ற முக்கிய தூண்டுதலாளர்களாகும்.

பணவீக்க இலக்கிடல், பணவீக்க எதிர்பார்ப்புக்களை காத்திரமான முறையில் முகாமைப்படுத்துவதிலும் நிறுத்தி வைப்பதிலும் தொடர்புடையனவாக இருப்பதனால் குறிப்பாக திட்டமிடல், குறிக்கோள்கள் மற்றும் நாணயக் கொள்கையுடன் தொடர்பான தீர்மானங்கள் என்பனவற்றின் வெளிப்படையான தன்மை மிகவும் முக்கியமானதாகும். எனவே வெளிப்படையான தன்மை தொடர்பூட்டல்களினூடாக எய்தப்படுவதனால், பணவீக்க இலக்கிடலாளராக வருவதற்கு வாய்ப்புப் பெற்றவர் என்ற ரீதியில் மத்திய வங்கி சிறந்த சாதனங்களுடன் கூடிய தொடர்பூட்டல் உபாயங்களுக்கான தேவை அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி, தொடர்பூட்டல் உபாயங்களை உயர்த்துவதற்கு பல முன்னெடுப்புக்களை நாம் ஏற்கனவே ஆரம்பித்திருக்கிறோம். பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவியுடன் கிரமமான நாணயக் கொள்கை தொடர்பான பத்திரிகை அறிவித்தல்களின் பகுப்பாய்வுப் பெறுமதியை நாம் அதிகரிக்கின்ற வேளையில், முன்னோக்கிய அணுகுமுறையில் தெளிவான, எளிமையான தன்மைகள் பேணப்பட்ட வேளையில் முன்னோக்கிய அணுகுமுறைகள் உயர்த்தப்பட்டன. மேலும், நெகிழ்ச்சிதன்மை கொண்ட பணவீக்க இலக்கிடலிலுள்ள குறிப்பாக பத்திரிகையாளர்களுக்கும் ஏனைய ஆர்வலர்களுக்கும் அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம். மேலும், கிரமமான நாணயக் கொள்கை அறிக்கைகளை வழங்குகின்றமை உட்பட பல வழிமுறைகள்

ஆயத்தநிலையிலிருக்கின்றன. இவை எதிர்காலத்தில் பணவீக்க அறிக்கைகளில் உள்ளடக்கப்படவுள்ளதுடன் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பரந்தளவு பிரதேசங்களை சென்றடையும் விதத்தில் விரிவாக்கப்படும். இவை நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலுக்கான வழிகாட்டலில் எடுத்துக்காட்டப்பட்டவாறு அடுத்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும்.

இன்னொரு முக்கிய நடவடிக்கையாக கிரமமான நாணயக் கொள்கை அறிவித்தல்களின் பொருட்டு கடந்த ஆண்டிலிருந்து முன்கூட்டியே விடுவிக்கப்படும் கலண்டரை மீளவும் வெளியிட்டிருக்கிறோம். இந்நடைமுறையினை தொடருகின்ற விதத்தில் 2019ஆம் ஆண்டிற்கான நாணயக் கொள்கை அறிவித்தலுக்கான முன்கூட்டியே **விடுவிக்கும் கலண்டரை கீழேயுள்ளவாறு சமர்ப்பிக்க விரும்புகிறோம்.**

**2019இல் நாணயக் கொள்கை அறிவித்தல்கள்**

| அறிவித்தல் இல. | அறிவித்தல் திகதி |
|---|---|
| **1** | 22 பெப்புருவரி, வெள்ளிக்கிழமை |
| **2** | ஏப்பிறல் 10, புதன்கிழமை |
| **3** | மே 31, வெள்ளிக்கிழமை |
| **4** | யூலை 12, வெள்ளிக்கிழமை |
| **5** | ஓகத்து 23, வெள்ளிக்கிழமை |
| **6** | ஒத்தோபர் 11, வெள்ளிக்கிழமை |
| **7** | நவெம்பர் 15, வெள்ளிக்கிழமை |
| **8** | திசெம்பர் 27, வெள்ளிக்கிழமை |

2018இன் முதலரைப்பகுதியில் உலகளாவிய பொருளாதாரம் ஓரளவு குறைவான உத்வேகத்தைக் கொண்டிருந்த போதும் உலகளாவிய வளர்ச்சி வேகம் உறுதியானதாக விளங்கி முக்கிய பொருளாதாரங்களில் நாணயக் கொள்கைகள் மேலும் வழமைப்படுத்தப்படுவதனை எடுத்துக்காட்டின. இது, மூலதனப்பாய்ச்சல்கள், நாணயத் தேய்வு, வர்த்தகப்போர் போன்றவற்றுடன் இணைந்து காணப்படும் பொருளாதாரச் சமநிலையான தன்மைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பெரும்பாலான சந்தைப் பொருளாதாரங்கள் அவற்றின் நாணயக் கொள்கையினைச் சீராக்குவதனை அவசியமாக்கியது. அத்தகைய போக்குகளைப் பரிசீலனையில் கொண்டும் உள்நாட்டுப்

பொருளாதார அபிவிருத்திகளுக்குப் பதிலிறுத்தும் விதத்திலும் இலங்கையில் நிலையான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக எமது நாணயக் கொள்கையின் வடிவமைப்பதும் தொடர்ந்தும் விழிப்புடன் இருந்து வருவோம்.

## 3. 2019இற்கும் அதற்கு அப்பாலுக்குமான நிதியியல் துறைக் கொள்கைகள்

நாணயவிதிச் சட்டத்தினால் பொறுப்பளிக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதில் இலங்கை மத்திய வங்கியானது வினைத்திறன் மிக்க வள ஒதுக்கீட்டின் ஊடாக பொருளாதார வளர்ச்சியை வசதிப்படுத்துகின்ற ஆற்றல்வாய்ந்த, தாக்குப்பிடிக்கத்தக்க மற்றும் உறுதியான நிதியியல் துறையினை தொடர்ந்தும் பேணி வளர்க்கின்றது. இதனை அடையும் விதத்தில், மத்திய வங்கியானது இயக்கவாற்றல்மிக்க அத்துடன் உறுதியான நிதியியல் நிறுவனங்களை ஊக்குவிக்கின்ற அதேவேளை வினைத்திறன்மிக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையொன்றினை வசதிப்படுத்துகின்ற நிதியியல் முறைமையின் உச்சமட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நிறுவனமாக செயற்படுகின்றது.

2018இல், உள்நாட்டு அதேபோன்று உலகளாவிய சூழலில் காணப்பட்ட சவால்மிக்க சந்தை நிலைமைகளுக்கு மத்தியில் **நிதியியல் துறை** சிறப்பாகச் செயலாற்றியது. வங்கித்தொழில் துறையின் சொத்து வளர்ச்சியானது திரவத்தன்மை மற்றும் மூலதன மட்டங்கள் போன்றவற்றிலான மேம்பாடுகளுடன் சாதகமான மட்டங்களில் காணப்பட்ட அதேவேளை 2018இன் போது வங்கியல்லா நிதியியல் துறைகளில் அவதானிக்கப்பட்ட மெதுவடைதலுக்கு மத்தியிலும் நிதியியல் ரீதியான செயல்விளைவும் வலுப்படுத்தப்பட்டது.

வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பினை வலுப்படுத்துவது எமது நிதியியல் துறைக் கொள்கையின் மையமாக விளங்குகின்றது. 2018இன் போது உரிமம்பெற்ற வங்கிகள் தொடர்பிலான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை கட்டமைப்பானது பன்னாட்டு தர நியமங்கள் மற்றும் சிறந்த நடத்தைகள் என்பவற்றுக்கு இசைவாக பல கொள்கை வழிமுறைகளின் அறிமுகப்படுத்தலுடன் மேலும் வலுப்படுத்தப்பட்டது. 2018ஆம் ஆண்டின் போது பாசல் III திரவத்தன்மை தரநியமங்கள் முடுக்கி விகிதம் மீதான பணிப்புரைகளை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டது. முடுக்கி நியமங்கள் மீதான பணிப்புரைகளும் வெளியிடப்பட்டு வருகின்றன. இதற்கு மேலதிகமாக, மத்திய வங்கியானது வெளிப்படைத் தன்மையினை ஊக்குவிப்பதனையும் வங்கிகள் மூலமான வெளிநாட்டுக் கடன்பாடுகளின் இடர்நேர்வு முகாமைத்துவ நோக்குகளை மேலும் வலுப்படுத்துவதனையும் நோக்காகக்கொண்டு உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மீது பணிப்புரைகளை வழங்கியது.

அதேவேளை, உரிமம்பெற்ற வங்கிகளின் நிதியியல் பெறுதிச் சந்தைகள் தொடர்பில் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை வலுப்படுத்துவதற்காக நிதியியல் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள் மீது மத்திய வங்கி பணிப்புரைகளை வழங்கியது. முகவர்களை நியமிப்பதற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றும் வெளியிடப்பட்டது. பணிப்புரையானது, பெருமளவில் முகவர்களை அனுமதித்தல் மற்றும் தெரிவுசெய்தல் செயன்முறை, வங்கிகளின் பொறுப்புகள், அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகள், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை, வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் பிணக்குத் தீர்த்தல் என்பனவற்றை மையப்படுத்தியுள்ளது. மேலும், நிதியியல் கருவிகள் பற்றிய நிதியியல் அறிக்கையிடுதல் மீதான இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் 9இனைப் பின்பற்றுதலானது பன்னாட்டு சிறந்த நடத்தைகளுக்கு இசைவாக பின்பற்றப்படும் மற்றுமொரு முன்னேற்றகரமான கொள்கை வழிமுறையாகும். இலங்கை மத்திய வங்கியானது நியமங்களின் நிலையானதும் முன்மதியுடையதுமான பிரயோகங்களுக்காக இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் ஆலோசனையுடன் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 இனைப் பின்பற்றுதல் தொடர்பான வழிகாட்டல்களை விரைவில் வங்கிகளுக்கு வழங்கும்.

இலங்கை மத்திய வங்கியானது உரிமம்பெற்ற வங்கிகள் தொடர்பிலான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் புதிய வங்கித்தொழில் சட்டமொன்றினை வரைவதனை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. மேற்பார்வை செய்தலுக்கும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்குமான ஒட்டுமொத்த பொறுப்பாணை, நிறுவன ஆளுகையினை வலுப்படுத்தல், டிஜிட்டல் வங்கித்தொழில், ஒருங்கிணைக்கப்பட்ட மேற்பார்வை, தீர்மானம், நாணய தண்டங்கள்/ குற்றப்பணங்கள், குறித்த நோக்கத்திற்காக மாத்திரம் நிதியங்கள் செலவிடப்படுவதற்கான உத்தரவாதம், ஒன்றிணைத்தல், கையகப்படுத்தல், ஒன்றுதிரட்டுதல், வெளிநாட்டு வங்கிகளை துணை நிறுவனங்களாக்குதல் மற்றும் வங்கிகளுக்கான வேறுபடுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு என்பன முன்மொழியப்பட்ட சட்டத்தில் இடம்பெறுவுள்ள முக்கிய கொள்கை அம்சங்களாகும். இதற்கு மேலதிகமாக, இடர்நேர்வு அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வை மற்றும் திட்டமிடல் செயன்முறைக்காக 2019ஆம் ஆண்டு தொடக்கம் வங்கித்தொழில் உறுதித் தன்மை தரப்படுத்தல் சுட்டெண் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இணையத்தள தாக்குதல்கள் மற்றும் வேறு தகவல் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் என்பவற்றினால் வங்கிகள் அடிக்கடி இலக்கு வைக்கப்படுவதனால், பன்னாட்டு தர நியமங்கள் மற்றும் சிறந்த நடத்தைகளுக்கமைவாக வங்கித்தொழில் துறையில் தொழில்நுட்ப இடர்நேர்வின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை மேம்படுத்துவதற்கு

அலோசனைப் பத்திரமொன்று வழங்கப்பட்டது. இது தொடர்பாக வங்கித்தொழில் பணிப்புரையொன்று 2019இல் விடுக்கப்பட்டது.

ஒழுங்குமுறைப்படுத்துநரென்ற முறையில், நாம் வலிமைப்படுத்தப்பட்ட நிறுவன ஆளுகைக்கும் சொத்தாண்மைத் திரட்சி, சபைகளில் ஆதிக்கம், தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் அக்கறை முரண்பாடு மற்றும் தொடர்பான தரப்பு கொடுக்கல்வாங்கல்களுடன் இணைந்த இடர்நேர்வுகள் போன்றவற்றை தவிர்ப்பதற்கும் வங்கிகளின் பங்குச் சொத்தாண்மை பரந்தளவிலான அடிப்படையில் அமைந்திருக்கவேண்டியது அவசியமென நம்புகின்றோம். எனவே, பங்குச் சொத்தாண்மை மீது தற்போது காணப்படுகின்ற தேவைப்படுத்தல்கள் மீளாய்வு செய்யப்படும் என்பதுடன் சில மேலதிக வழிமுறைகள் கொண்டுவரப்படும். இதற்கு மேலதிகமாக, வங்கிகளிலுள்ள உயர் பதவிகளுக்கு மிகப்பொருத்தமான மற்றும் தகைமை பெற்றவர்களை நியமிப்பதற்காக வங்கிகளின் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணி ஆகியோரின் நியமனத்திற்காக பொருத்தமான மற்றும் முறையான மதிப்பீட்டு பிரமாணங்கள் மேலும் வலுப்படுத்தப்படும். சிறந்த கடந்தகால நடத்தை பதிவுகளையும் நிதியியல் நேர்மையினையும் கொண்ட ஆட்கள் மாத்திரம் அத்தகைய நியமனங்களுக்கு பரிசீலனையில் கொள்ளப்படுவர்.

மேலும், வெளிநாட்டிலுள்ளவர்களிடமிருந்தான நிபுணத்துவப் பங்களிப்பின் தேவைகளைக் கருத்திற்கொண்டு வெளிநாட்டுப் பதவியினரின் தொழில்நிலை தொடர்பான பரந்த அடிப்படையிலான கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. வங்கித்தொழில் துறைச் சூழல் மற்றும் தொழில்சார் கணக்கீடு மற்றும் கணக்காய்வு சூழமைவு என்பவற்றில் காணப்படும் கணிசமான முன்னேற்றங்களைக் கருத்திற்கொண்டு, வெளிவாரிக் கணக்காய்வாளர்களை நியமிப்பதற்கான குறைந்தபட்ச பிரமாணங்கள் ஏற்கனவே மீளாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கேற்றவாறு தகைமைபெற்ற கணக்காய்வாளர்களைக் கொண்ட குழுவிற்குத் திருத்தம் செய்யப்படும்.

உரிமம்பெற்ற வங்கிகளின் திறைசேரி தொழிற்பாடுகள் தொடர்பான சந்தை நடத்தை மற்றும் நடைமுறைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் உரிமம்பெற்ற வங்கிகளின் திறைசேரித் தொழிற்பாடுகள் முன்மதியுடனும் பன்னாட்டு சிறந்த நடத்தைகளுக்கு இசைவாகவும் கொண்டு நடாத்தப்படுகின்றன என்பதனை உறுதிசெய்வதற்கு புதிய ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றினை நிறுவுவதற்கு மத்திய வங்கி உத்தேசிக்கின்றது. பிரச்சனைக்குள்ளான வங்கிகள் தொடர்பான பாதகமான தாக்கத்தினையும் அதிலிருந்து கசிந்து பரவும் தாக்கத்தினையும் குறைப்பதற்கும்,

வங்கித்தொழில் துறைக்காக நெருக்கடி தயார்நிலைத் திட்டமொன்றினையும் மத்திய வங்கி வகுக்கும். இது தொடர்பில் வங்கிகளுக்கு ஆலோசனைப் பத்திரமொன்று வழங்கப்படும்.

உள்ளக ஒழுங்குமுறைப்படுத்தல் ஒத்துழைப்பு மற்றும் கூட்டுமுயற்சி என்பவற்றுக்கிடையிலான வலுப்படுத்தலுக்கான தேவையினை நாம் உறுதியாக நம்புவதனால் மத்திய வங்கி, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு மற்றும் ஏனைய உள்நாட்டு ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் என்பவற்றிற்கிடையில் மத்திய வங்கி தலைமை ஒழுங்முறைப்படுதுனராக இருக்குமிடங்களில் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையினை திரட்சிப்படுத்துவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படும்.

பல சந்தர்ப்பங்களில் நாம் வலியுத்தியுள்ளவாறு, பொருளாதாரத்தின் நிதியியல் தேவைகளை மிகவும் காத்திரமாக நிறைவேற்றுகின்ற அதேவேளை நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை பாதுகாப்பதற்கு வலுவான மற்றும் இயக்கவாற்றல் மிக்க வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் சந்தையினால் தூண்டப்பட்ட திரட்டுதல் வசதிப்படுத்தப்படும்.

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினதும் செயலாற்றமானது குறைவான கடன் வளர்ச்சி, இலாபத்தன்மை வீழ்ச்சி, செயற்படாக் கடன்களின் அதிகரிப்பு என்பன காரணமாக 2018இன் போது குறிப்பிடத்தக்களவு மெதுவடைந்தது. துறையில் ஏற்பட்ட மெதுவடைதலானது மிதமான பொருளாதார வளர்ச்சியினதும், 2017 மற்றும் 2018இன் முதலரைப்பகுதியில் நிலவிய வெள்ளப்பெருக்கு மற்றும் வரட்சி நிலைமைகள் போன்ற இயற்கை அனர்த்தங்களின் தாக்கத்தினதும் விளைவொன்றாக இருந்தது. உந்து இறக்குமதி மீதான மிகையான கேள்வியினைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகளும் துறைக்கு குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தன.

2018இன் போது, இவ்வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை வலுப்படுத்தவதற்கு பல ஒழுங்குமுறைப்படுத்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. நிதியியல் வாடிக்கையாளர் நலன்களைப் பாதுகாப்பதற்கும் துறை பற்றிய வாடிக்கையாளர் நம்பிக்கையினை வலுப்படுத்துவதற்கும் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தபட்டது.

இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மீதான வலுவான வலியுறுத்தலினை பேணி வளர்த்தல் மற்றும் துறையின் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்ளளவில் காணப்படுகின்ற தற்போது முன்னெடுக்கப்படும் மேம்படுத்தல்களை ஊக்குவித்தல் ஆகிய நோக்குடன் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கென புதிய மூலதன போதுமைக் கட்டமைப்பொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. புதிய கட்டமைப்பின் நியதிகளுக்கமைய, ரூ.100 பில்லியனுக்கு மேற்பட்ட சொத்துகளுடனான கம்பனிகள் உயர்வான மூலதனப் போதுமை விகிதாசாரங்களை பேணுவதற்கு வேண்டப்படுகின்றன.

மேலும், வெளியிலிருந்து சேவையினைப் பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தங்களைத் தரப்படுத்துவதற்கு வர்த்தகத் தொழிற்பாடுகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான புதிய பணிப்புரையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அசையாத சொத்துகள் தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் என்பவற்றின் பெறுமதி மதிப்பீட்டு நடைமுறையினை முறைப்படுத்துவதற்கு பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. வைப்பாளர்களினதும் முறைமை உறுதிப்பாட்டினதும் நலனுக்காக 2018இன் போது சில உரிமங்களை இரத்துச்செய்தல் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை முடிவுறுத்தல் மீதான ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்தல் உள்ளடங்கலாக இடருக்குள்ளான கம்பனிகள் தொடர்பில் பல தீர்மான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

முன்னோக்கிப் பார்க்கையில், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் 9இன் அறிமுகப்படுத்தலுடன் துறையானது குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் உயர் கடன் இழப்பீடு வழங்கல் என்பவற்றிற்கான மேம்படுத்தலுடன் துறை ஈடுகொடுக்கவேண்டிய தேவை காணப்படுகின்றது. மேலும், மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் எண்ணப்பாங்கில் காணப்படும் மாற்றமானது இணங்குவிக்காத இடருக்குள்ளான மற்றும் உயர் இடர்நேர்வு மிக்க உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கெதிராக முன்கூட்டிய ஒழுங்குமுறைப்படுத்தல் தலையீடுகளைத் தோற்றுவிக்கும். இது வைப்பு மற்றும் கடன் வழங்கலில் உச்சங்களை விதித்தல் அதேபோன்று உரிமங்களை தற்காலிகமாக இடைநிறுத்தல் மற்றும் இரத்துச்செய்தல் போன்ற தொழில் மீதான மட்டுப்படுத்தல்கள் போன்ற ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை உள்ளடக்கும். மேலும், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் நிதி அறிக்கையிடுதலுக்காக ஏற்புடைய வழிகாட்டல்கள் வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. சொத்தாண்மை மட்டுப்பாடுகள் மீது பணிப்புரைகளை வழங்குவதற்கும் நாம் பரிசீலிக்கின்றோம்.

அத்துடன், அதிகரிக்கப்பட்ட மூலதனத் தேவைப்பாடுகளின் விளைவொன்றாக துறையின் மூலதன மட்டங்களை மேலும் வலுப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இணங்கியொழுகுவதற்கு இயலாதுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் சுயவிருப்ப அடிப்படையில் வலுவூட்டுவதற்கு ஊக்குவிக்கப்படுமென்பதுடன் இணங்குவிக்காமையானது வைப்புகள் மற்றும் சொத்து விரிவாக்கம் என்பன மீது கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும். அவசியமானவிடத்து வியாபாரங்கள் முடிவுறுத்தப்படுகின்றன. எனவே, அண்மைய எதிர்காலத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மூலதன விரிவாக்கத் திட்டங்கள் மீது அதிக முன்னுரிமை செலுத்தவேண்டிய தேவை காணப்படுகின்றது. இது தொடர்பில் ஒழுங்குமுறைப்படுத்தல்கள் விட்டுக்கொடுக்கப்படமாட்டா.

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக இடருக்குள்ளான எஞ்சியுள்ள கம்பனிகளுக்கு தீர்வுகாண்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இரண்டு இடருக்குள்ளான கம்பனிகளின் உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை துணையளிப்புத் திட்டத்தின் கீழ் தற்போது காணப்படுகின்ற வைப்பாளர்களின் பொறுப்புக்களின் தீர்ப்பனவு நடப்பில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இடருக்குள்ளான நிதிக் கம்பனிகள் தொடர்பில் விரைவான தீர்மான நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதற்காக நிதித்தொழில் சட்டத்திற்கு திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

2018ஆம் ஆண்டின் போது நாட்டின் **கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பினை** வலுப்படுத்துகின்ற அதேவேளை, பொருளாதாரத்தின் வளர்ந்துவரும் கொடுப்பனவுத் தேவைகளை நிறைவுசெய்வதற்கு கொள்ளளவுள்ள வினைத்திறன் வாய்ந்த அத்துடன் உறுதியான தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையொன்றினை உருவாக்கும் அதன் முயற்சிகளை மத்திய வங்கி தொடர்ந்தும் முன்னெடுத்தது.

இம்முயற்சிகளின் சிலவற்றை சுருக்கமாகக் குறிப்பிடவிரும்புகின்றேன். “லங்காபே” என்ற வர்த்தக நாமத்தின் கீழ் பன்னாட்டு அட்டைத்திட்டமொன்றுடனான பங்காண்மையுடன் தேசிய அட்டைத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டிற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது 2018இல் உரிமம்பெற்ற வர்த்த வங்கி லங்காபே அட்டைகளை வழங்குவதற்கு ஆரம்பித்ததிலிருந்து இயக்கத் தொடங்கியது.

உலகம் முழுவதும் வளர்ந்து வருகின்ற புதிய கொடுப்பனவு தொழில்நுட்பங்களின் விளைவாக அவற்றுடன் இணைந்து செல்வதற்கும் அதையொத்த தொழில்நுட்பங்களுடன் ஒத்தநிலையில் விளங்குவதற்கு உள்நாட்டு நிறுவனங்களினால் காண்பிக்கப்படும் ஆர்வத்தினாலும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு மீதான ஆலோசனைக் குழுவான தேசிய கொடுப்பனவுகள் சபையானது நிதியியல் தொழில்நுட்பத் துறை மற்றும் டிஜிட்டல் பேரேட்டு தொழில்நுட்பம் போன்றவற்றில் காணப்படுகின்ற முன்னேற்றங்களை ஆய்வு செய்வதற்கு இரண்டு குழுக்களை நியமித்தது. நிதியியல் தொழில்நுட்பக் குழுவினால் ஆக்கப்பட்ட விதந்துரைகளுக்கமைவாக துரித பதிலிறுத்தல் (QR) குறியீட்டினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுகளை வசதிப்படுத்துவதற்காக அனைத்து நிதியியல் நிறுவனங்களுக்கும் அத்துடன் இலத்திரனியல் பண (இ - பணம்) முறைமைகளின் அடிப்படையில் அமைந்த செல்லிடத் தொலைபேசி தொழிற்படுத்துநர்களுக்கும் "LANKAQR" என்ற வர்த்தக நாமத்திலமைந்த உள்நாட்டு நாணயக் கொடுப்பனவுகளுக்கான தேசிய துரித பதிலிறுத்தல் (QR) குறியீட்டு தரநியமமொன்று வழங்கப்பட்டது. இதேபோன்று, டிஜிட்டல் பேரேட்டு தொழில்நுட்பம் தொடர்பில் கைத்தொழில்களுக்கிடையேயான வேலைக்குழு டிஜிட்டல் பேரேட்டு தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட உங்கள் வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுங்கள் என்பதற்காக கட்டமைப்பொன்றினை தயாரித்து வருகிறது.

மேலும், பொதுநிதியங்களின் முறைமை உறுதிப்பாட்டினையும் பாதுகாப்பினையும் உறுதிசெய்வதற்கு எடுக்கப்படவேண்டிய ஏதேனும் ஒழுங்குமுறைப்படுத்தல் படிமுறைகள் பற்றி பரீட்சிப்பிற்கு மெய்நிகர் நாணயத்திட்டங்கள் தொடர்பாக செயலணிக்குழுவொன்றினை மத்திய வங்கி நியமித்தது. இதற்கு மேலதிகமாக, நாட்டில் பாதுகாப்பானதும் வினைத்திறன்மிக்கதுமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை உறுதிசெய்யும் பொருட்டு 2018இல் பல ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன.

எதிர்காலத் திட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்காக காசு முகாமைத்துவ செலவினைக் குறைக்கின்ற அதேவேளை பாதுகாப்பினையும் சௌகரியத்தினையும் அதிகரிக்கும் நோக்குடன் காசுப்பாவனை குறைந்த சமூகமொன்றினைத் தாபிப்பதற்காக டிஜிட்டல் கொடுப்பனவுப் பொறிமுறைகளை ஊக்குவிப்பதன் மீது மத்திய வங்கி கவனம் செலுத்தும். அதற்கமைய, பேருந்து மற்றும் புகையிரதப் போக்குவரத்தில் பயன்படுத்தப்படுவதற்கு நாட்டில் தேசிய ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படும் பயணச்சீட்டு அட்டையொன்றினை அறிமுகப்படுத்தும் நோக்கத்திற்காக பயணச்சீட்டு வழங்குதல் மற்றும் கட்டணம்

சேகரித்தலுக்கான தேசிய பயணச்சீட்டு அட்டை மற்றும் உட்கட்டமைப்புக் கட்டமைப்பொன்றின் நடைமுறைப்படுத்தலினையும் நாம் வசதிப்படுத்தவுள்ளோம். டிஜிட்டல் கொடுப்பனவு முறைமைகளை இயலச்செய்வதற்கு நிதியியல் நிறுவனங்களை ஊக்குவித்தல் மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவுத் தெரிவுகள் அத்துடன் அவற்றின் நன்மைகள் பற்றி பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வினைத் தோற்றுவித்தல் போன்றன வாயிலாக டிஜிட்டல் கொடுப்பனவுப் பொறிமுறைகளின் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகளை நாம் தொடர்ந்தும் பின்பற்றுவோம்.

புதுமைபடைக்கின்ற நிதியியல் தொழில்நுட்ப உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதனை இயலச்செய்கின்ற அதேவேளை ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுத்தல்களுடன் இணங்குவதனை உறுதிசெய்வதற்கு ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பொன்றினை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கொள்கைகளும் வழிமுறைகளும் இலங்கை மெய்நிகர் வங்கித்தொழில் மற்றும் முன்னேற்றங்கண்ட தொழில்நுட்பங்களை நோக்கி இலங்கை நகர்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்கும். ஆகவே நாம் நிதியியல் நிறுவனங்கள் தாமதமின்றி இம்முயற்சிகளில் இணைந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இலங்கையின் நிதியியல் முறைமையானது, முன்னொரு போதுமில்லாதவாறு ஒன்றுக்கொன்று இணையப்பெற்றதாகவும் சிக்கல்வாய்ந்ததாகவும் அதிர்வுகளுக்கு மிகவும் எளிதாக பாதிக்கப்படக்கூடியதாகவும் தோற்றம் பெற்றுள்ளது என்ற உண்மையும் குறிப்பிடத்தக்கவொன்றாக விளங்குகின்றது. அதற்கமைய, மத்திய வங்கியானது நாட்டின் ஒட்டுமொத்த நிதியியல் உறுதிப்பாட்டின் மீது முக்கிய தாக்கமொன்றினைக் கொண்டிருக்கக்கூடிய பரந்த சந்தை மற்றும் பொருளாதாரக் காரணிகளை நோக்குவதற்காக தனிப்பட்ட நிறுவன மட்டத்திலான மேற்பார்வையினையும் தாண்டிச் செல்கின்ற அதிகமாக அனைத்தையுமுள்ளடக்கிய **பேரண்ட முன்மதியுடைய அணுகுமுறையொன்றின்** முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கின்றது.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டவாறு, சவால்மிக்க சந்தை நிலைமைகளுக்கு மத்தியில் அத்துடன் பேரண்ட முன்மதியுடைய மேற்பார்வை மற்றும் ஒழுங்குவிதிகளுக்குப் புறம்பாக உரியகால பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகளின் உதவியுடன் 2018இல் நிதியியல் முறைமை உறுதிப்பாடு பேணிக்காக்கப்பட்டது. இது தொடர்பில் பொருளாதாரத்தின் நிதியியல் முறைமை உறுதிப்பாடு மற்றும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு

என்பவற்றைப் பாதிக்கின்ற தோற்றம் பெறுகின்ற ஊடுருவும் இடர்நேர்வுகளை கையாளுவதற்கு மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் பல எண்ணிக்கையான வழிமுறைகள் எடுக்கப்பட்டன. கடன் வழங்குதல் தொடர்பில் மோட்டார் வாகனங்கள் மீது பெறுமதிக்கான கடன் விகிதாசாரங்களை விதித்தல், தெரிவுசெய்யப்பட்ட வாகன வகைகள் அத்துடன் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்கள் மீதான எல்லைகளை விதித்தல் என்பன தோற்றம்பெற்றுவரும் இடர்நேர்வுகளைத் தவிர்ப்பதற்காக மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகளாகும். முறைமை உறுதிப்பாட்டின் மீது இடர்நேர்வுகளை ஏற்படுத்தக்கூடிய பொருளாதாரத்தின் கொதிநிலையிலுள்ள துறைகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகளை மத்திய வங்கி தொடர்ந்தும் மீளமைக்கும் என்பதுடன் மத்திய வங்கிச் சட்டத்திற்காக முன்மொழியப்பட்ட திருத்தங்களுக்குள் வலுவான பேரண்ட முன்மதியுடைய கட்டமைப்பொன்றிற்கான ஏற்பாடுகளை கூட்டிணைப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

மத்திய வங்கியின் பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புக் கட்டமைப்பின் கீழ் செயற்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்ற புதிய விடயப்பரப்புக்கள் காணப்படுகின்றன. இவை, நிறுவனத் துறைக்கான வங்கித்தொழில் துறை மற்றும் வங்கியல்லா துறை வெளிப்பாடுகளிலுள்ள போக்குகளைப் பகுப்பாய்வு செய்தல், வங்கித்தொழில் துறை மீதான இயக்கவாற்றல்மிக்க எதிர்காலத்திற்கான பண ஒதுக்குக் கட்டமைப்புகளின் தாக்கத்தினை மதிப்பிடுதல், வீட்டுத் துறைக்கான நிதியியல் துறை வெளிப்பாட்டினை பகுப்பாய்வு செய்தல், வதிவிட ஆதனக் கொள்வனவாளர்களை பாதுகாப்பதற்கும் உண்மைச் சொத்துச் சந்தையின் நீண்டகால உறுதிப்பாட்டினை எய்துவதற்கும் மூன்றாந்தரப்புக் கணக்குகளை அறிமுகப்படுத்தும் சாத்தியத்தினை மதிப்பிடுதல் அதேபோன்று கடன், சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகளை உள்ளடக்கி உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்காக பல்மாறிலி அழுத்தப் பரிசோதனைகளை ஆரம்பித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

மத்திய வங்கியின் முக்கிய உபாய முன்னுரிமையாக இடர்நேர்வு முகாமைத்துவத்தினை நாம் அங்கீகரித்திருக்கிறோம். தொழில்முயற்சி அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டினை தொடங்கியுள்ளோம். இது தகவல்களை அடிப்படையாகக் கொண்ட இடர்நேர்வினை அனைத்து மட்டங்களிலும் மேற்கொள்ளும் கலாச்சாரத்தினை ஊக்குவிப்பதனை நோக்கமாகக் கொண்டதாகும். இதன்படி மத்திய வங்கியின் இடர்நேர்வு ஆளுகைக்

கட்டமைப்பு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை என்பனவற்றினை 2018இல் நாணயச் சபையினால் ஒப்புதல் வழங்கப்பட்டதுடன் தொடர்பான குழுக்கள் உருவாக்கப்பட்டதுடன் கட்டமைப்புத் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக கூட்டங்கள் கூட்டப்பட்டன. 2019இல் இடர்நேர்வு பதிவேடுகளை உருவாக்கவும் சம்பவ அறிக்கைகளுடன் பொறிமுறையினை நடைமுறைப்படுத்தவும் நாம் எதிர்பார்கிறோம். நிதியியல் நடவடிக்கைகளில் இடர்நேர்வு முகாமைத்துக் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்துவோம்.

நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதனை நோக்கி அதிகரித்துவரும் தேவை அதேபோன்று உற்பத்தித் திறன் வாய்ந்த அத்துடன் நிலைபெறத்தக்க முதலீட்டினை வழங்குவதன் மூலம் பசுமையான அத்துடன் காலநிலை நட்புமிக்க வளர்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவித்தல் என்பனவற்றுடன் மத்திய வங்கியானது 2017இல் இலங்கையில் நிலைபெறத்தக்க நிதியியல் நடத்தைச் செயன்முறையொன்றினை ஆரம்பித்தது. அதற்கமைய, நிதியியல் துறைக்கு கொள்கைப் பணிப்புரையினை வழங்கும் நோக்குடன் மத்திய வங்கியானது இலங்கையில் நிலைபெறத்தக்க நிதிக்கான வழிகாட்டல் ஒன்றினை உருவாக்கும் செயன்முறையினை முன்னெடுக்கின்றது. இச்செயன்முறைக்காக நாம் உலக வங்கியின் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து தொழில்நுட்ப உதவியினையும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திடமிருந்து நிதியியல் உதவியினையும் பெற்றுக்கொள்கின்றோம். முன்னோக்கிச் சென்று, 2019இன் போது நிலைபெறத்தக்க நிதிக்கான வழிகாட்டல் இனைத் தொடங்குவதற்கும் நாம் எண்ணுகின்றோம். இது, தமது சொந்த நிலைபெறத்தக்க நிதிக் கொள்கைகளை உருவமைப்பதிலும் திட்டமிடுவதிலும் அனைத்து ஆர்வலர்களுக்குமான உசாத்துணை ஒன்றாகப் பணியாற்றும்.

## 4. துணை மற்றும் முகவர் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட கொள்கைகள்

எமது மையத் தொழிற்பாடுகளைத் தவிர நாம் பல முகவர் மற்றும் துணை தொழிற்பாடுகளை திறம்பட செய்துள்ளோம். பொருளாதாரம் மற்றும் நிதியியல் முறைமையின் சீரான தொழிற்பாட்டிற்கு துணையளிப்பதற்கு நாம் இத்தொழிற்பாடுகளைச் செயலாற்றினோம். இதனூடாக பரந்த பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்கு நாம் பங்களிப்புச் செய்கின்றோம்.

**நாணய முகாமைத்துவம்**

மத்திய வங்கியானது அரசாங்கத்தின் சார்பில் நாணயத் தாள்களையும் குத்திகளையும் வழங்குவதற்கான பிரத்தியே உரிமையினைக் கொண்டுள்ளது. 2018இன் போது எமது பொறுப்பாணைக்கு அமைவாக இத்தொழிற்பாட்டினை நாம் தொடர்ந்தும் செயலாற்றினோம். தொழில்நுட்பத்தினால் தூண்டப்பட்ட காசல்லாத கொடுப்பனவு முறைகளின் அதிகரித்த பயன்பாட்டிற்கு மத்தியில் பொருளாதாரத்தின் விரிவுபடுத்தலுக்கிசைவாக 2018இல் நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளுக்கான கேள்வி அதிகரித்தது. 2018இல் நாம் புதிய குத்திகளை ஆரம்பித்ததுடன் ஞாபகார்த்த நாணயத் தாளொன்றினையும் குத்தியொன்றினையும் வெளியிட்டோம். மேலும், இலங்கையில் நாணயத் தாள்களின் தரத்தினை பேணிக்காக்கும் பொருட்டு வேண்டுமென்றே மாற்றம் செய்யப்பட்ட, உருச்சிதைக்கப்பட்ட அல்லது சேதப்படுத்தப்பட்ட நாணயத் தாள்களுக்கெதிராக நாம் கொள்கை வழிமுறைகளை அறிமுகப்படுத்தினோம். தொடர்ச்சியான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதனூடாக நாணய அதேபோன்று தூய நாணயத் தாள் கொள்கை தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் தொடர்ந்தும் விழிப்புணர்வினை அதிகரித்துள்ளோம்.

மேலும், முன்னோக்கிப் பார்க்கையில், நாணயத் தொழிற்பாடுகளையும் செயன்முறைப்படுத்தல்களையும் மேம்படுத்துவதற்கு இராஜகிரியையிலுள்ள வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலைய வளாகத்தில் புதிய பாதுகாப்பு களஞ்சிய வசதி நிர்மாணப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வசதியினை 2019 இலிருந்து தொழிற்படுவதற்கு மத்திய வங்கி எதிர்பார்க்கப்படுகின்றது. நாணயத் தாள்களின் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் செயன்முறைப்படுத்தல் கொள்ளளவினை அதிகரிப்பதற்குமான நடுத்தரகாலத் தீர்வொன்றாக புதிய இயந்திரம் மற்றும் உபகரணங்களின் அறிமுகத்துடன் தற்கால தொழிற்பாட்டுப் பாய்ச்சலினை

மீள்வடிவமைப்பதற்கு நாம் திட்டமிடுகின்றோம். நாணயத் தாள்களின் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் 2021ஆம் ஆண்டில் புதிய நாணயத் தாள் தொடரொன்றினை வெளியிடுவதற்கு நாம் திட்டமிடுகின்றோம். குத்திகளை பகிர்ந்தளிப்பதற்கும் குத்தி விநியோக இயந்திரங்களை அறிமுகப்படுத்துவதற்கும் முறையான பொறிமுறையொன்றினை நிறுவுவதற்கும் நாம் திட்டமிடுகின்றோம். மேலும், தெரிவுசெய்யப்பட்ட பிராந்திய அலுவலங்களில் நாணயத்திற்கான அவசரகால களஞ்சியக் கொள்ளலவினை அதிகரிப்பதற்கு நாம் உத்தேசிக்கின்ற அதேவேளை காசு கொண்டு செல்லும் கம்பனிகளுக்கான வலுவான கண்காணிப்பு முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கும் திட்டமிடுகின்றோம்.

## பொதுப்படுகடன் முகாமைத்துவம்

அரசாங்கத்தின் இறை முகவராக நாம் 2018இன் போது மிகுந்த நெறிமுறையுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் முன்மதியுடனும் பொதுப்படுகடனை தொடர்ந்தும் வழங்கி கடன்களை மீளச்செலுத்தி முகாமை செய்ததுடன் அரசாங்கத்தின் நிதியளித்தல் தேவைப்பாடுகள் முன்மதிமிக்க இடர்நேர்வு மட்டமொன்றுடன் மிகக்குறைந்த சாத்தியமான செலவில் நிறைவுசெய்யப்படுகின்றன என்பதனை உறுதிசெய்வதற்கு பல கொள்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

2018இன் போது, ஐக்கிய அமெரிக்காவில் வட்டி வீதத்தினை இயல்பாக்குதல், சரிவடைந்த அரசாங்க நிதியளித்தல் தேவைப்பாடு அதேபோன்று அரசியல் சூழ்நிலையில் உறுதியின்மைகள் என்பன காரணமாக அரசாங்கப் படுகடன் முகாமைத்துவத்தில் பல சவால்களை நாம் சந்தித்தோம். இக்காரணிகள் அரசாங்க கடன்பாட்டுச் செலவினைப் பாதித்ததுடன் நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ உபாயத்தின் கீழ் குறிப்பாக குறுகிய காலம் தொடக்கம் நடுத்தரகாலம் வரையான முதிர்ச்சிகளுக்காக விளைவு வீதங்கள் மற்றும் சந்தை விருப்பங்களில் மேல் நோக்கிய சரிப்படுத்தலுடன் 2018இன் பிந்திய பகுதியை நோக்கி இலக்குகளை அடைவதன் மீது அழுத்தத்தினை ஏற்படுத்தியிருந்தது.

2017 யூலையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திறைசேரி முறி வழங்கல் முறைமையானது, அரசாங்கப் பிணையங்கள் வழங்கல் செயன்முறையின் வினைத்திறனையும் வெளிப்படைத் தன்மையினையும் மேலும் அதிகரிப்பதற்காக வழங்கல் முறைமையின் செயலாற்றம் மற்றும் சந்தைப் பங்கேற்பாளர்களிடமிருந்தான பின்னூட்டல் என்பவற்றை கவனத்திற்கொண்டு 2018இன் முதல் காலாண்டின் இறுதியளவில் மீளாயப்பட்டது. திறைசேரி முறி வழங்கல் முறைமைக்கு கட்டம் III இனை செயற்படுத்துவதற்கான முற்தேவைப்பாடுகளாக மேலும்

சந்தை அடிப்படையில் அமைந்த ஏற்றுக்கொள்ளல் ஒழுங்கேற்பாடு உள்ளடங்கலாக பல மேம்படுத்தல்கள் 2019இன் முதல் காலாண்டின் இறுதியளவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

மேலும், முதனிலை ஏலச் செயன்முறையின் மற்றும் பொதுவாக அரசாங்கப் பிணையங்கள் சந்தையின் வெளிப்படைத் தன்மை மற்றும் எதிர்வுகூறும் தன்மை என்பவற்றை மேம்படுத்தும் நோக்குடன் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களுக்கான ஏலக் கலண்டர் வகைப்படுத்தும் அடிப்படையொன்றில் வெளியிடப்பட்டது.

2019இல் சந்தை மற்றும் படுகடன் முகாமைத்துவ நடைமுறைகளை விருத்திசெய்வதற்கு நாம் பல்வேறு வழிமுறைகளை எடுப்பது பற்றி சிந்திக்கின்றோம். 2018 மாச்சில் தீவிரப் பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தின் வழியமைத்தலுடன் நாம் தாங்கியிருப்புக்களைக் கட்டியெழுப்புதல், பரிமாற்றம்செய்தல், மீளக்கொள்வனவு செய்தல், நேர்மாற்று ஏலங்கள் போன்றன வடிவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் பொறுப்பு முகாமைத்துவ நடைமுறைகளுக்கான ஆரம்ப வேளைகளை நாம் ஆரம்பித்துள்ளோம். எதிர்காலப் படுகடன் கடப்பாடுகள் மீதான பொறுப்பு முகாமைத்துவத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி அமைச்சின் ஆலோசனையுடன் நாம் ஏற்கனவே நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன் அமுலாக்கப் பெறுகைகள் எதிர்காலப் படுகடன் பொறுப்புக்களை நிறைவு செய்வதற்கு குறித்த நோக்கத்திற்காக மாத்திரம் நிதியங்கள் செலவிடப்படுவதற்கான உத்தரவாத ஒழுகேற்பாடொன்று பேணப்படும்.

இரண்டாந்தரச் சந்தையில் வெளிப்படைத் தன்மையினையும் வர்த்தகப்படுத்தக்கூடிய தன்மையினையும் அதிகரிக்கும் நோக்குடன் திறைசேரி உண்டியல்களுக்காக புதிய முதன்நிலை வழங்கல் முறைமையினை அறிமுகப்படுத்துவதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளுக்கான இரண்டாம் நிலைச் சந்தையினை செறிவாக்கி விரிவுபடுத்துவதற்கு தேவையான சட்ட ரீதியான மறுசீரமைப்புக்களுடன் சேர்த்து அரசாங்கப் பிணையங்களுக்காக மத்திய இணைத்தரப்பு ஒழுங்கேற்பாடொன்றுடன் தனித்துவமிக்க இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் தளமொன்றும் முன்மொழியப்பட்ட இ-வர்த்தகப்படுத்தல் தளம் மற்றும் தீர்வகம் ஊடாக படுகடன் சாதனங்கள் தொடர்பான இரண்டாந்தரச் சந்தைத் தகவல்களைப் பரப்புவதற்கான பொறிமுறையொன்றும் தாபிக்கப்படவுள்ளன.

இதற்கு மேலதிகமாக, பல்புடை முகவராண்மைகளின் உதவியுடன் நடுத்தரகால படுகடன் முகாமைத்துவ உபாயம் மேலும் ஒழுங்குபடுத்தப்படவுள்ளது. மேலும், படுகடன் முகாமைத்துவ முறைமையின் சீரான அத்துடன் வினைத்திறன் மிக்க தொழிற்பாட்டினை

உறுதிசெய்வதற்காக நாம் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட இருப்பு மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றுக்கான மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்துவோம்.

## ஊழிய சேம நிதிய முகாமைத்துவம்

ஊழிய சேம நிதியமான இலங்கையின் பாரிய ஓய்வு நிதியம் தொடர்பில் நாணயச் சபைக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதில் மத்திய வங்கியானது அதன் ஆர்வலர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை மேம்படுத்துகின்ற அதேவேளை அங்கத்தவர்களுக்கான ஆதாயம் மற்றும் நிதியத்தின் பாதுகாப்பு என்பவற்றை அதிகரிப்பதனை உறுதிசெய்வதற்கு பாடுபடுகின்றது.

2018இன் போது சந்தை நிலைமைகளுடனான முதலீட்டு உபாயத்தினை ஒழுங்குபடுத்துவதன் மூலம் ஆதாயங்களை அதிகரிப்பதற்கு உழிய சேம நிதியம் அதன் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்தது. அத்துடன் முதலீட்டு நடவடிக்கைகள் பற்றிய பொறுப்புக்கூறும் தன்மையினையும் வெளிப்படைத் தன்மையினையும் அதிகரிக்கும் நோக்குடன் ஊழியர் சேம நிதியத்தின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இச்செயன்முறையின் பாகமொன்றாக புதிய முதலீட்டுக் கொள்கைக் கூற்றும் முதலீட்டு வழிகாட்டல்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. ஊழிய சேம நிதிய முதலீட்டு மேற்பார்வைக் குழுவினை நிறுவுவதன் ஊடாக ஊழிய சேம நிதியத்தின் இடர்நேர்வு முகாமைத்துவ ஆளுகைக் கட்டமைப்பும் வலுப்படுத்தப்பட்டது. முதலீட்டினை கண்காணிப்பதற்கான ஊழிய சேம நிதிய முதலீட்டுக் குழுவுக்கு மேலதிகமாக ஊழிய சேம நிதியத்தின் தற்கால நடவடிக்கைகளை சீரமைக்கின்ற அத்துடன் மேம்படுத்துகின்ற நோக்குடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் ஊழிய சேம நிதிய தொழில் மீளாய்வொன்றினைக் கொண்டு நடாத்தினோம்.

இதற்குப் புறம்பாக, ஊழிய சேம நிதிய நடவடிக்கைகளை தானியக்கப்படுத்துவதற்காக புதிய தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முறைமையொன்றினை பெற்றுக்கொள்வதுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகள் உலக வங்கியின் உதவியுடன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட சேவைகளை வசதிப்படுத்தும் நோக்குடன் ஊழிய சேம நிதிய வெப்தளத்தினை நாம் உருவாக்கியுள்ளதுடன் விரைவில் அது தொடங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2018இல் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளில் இணையத்தள வங்கித்தொழில்

முறைமைகள் ஊடாக அங்கத்துவர் விபரங்களின் நிகழ்நேர செல்லுபடியாகுதலும் அங்கத்துவக் கணக்கு இற்றைப்படுத்தலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன.

மேலும் முன்னேற்றகரமாக, வேறுபட்ட முதலீட்டு உபாயங்கள் ஊடாக இடர்நேர்வு சீர்செய்யப்பட்ட உயர்மட்ட ஆதாயங்களை ஈட்டுகின்ற அதேவேளை புதிய முதலீட்டு கொள்கைக் கூற்று மற்றும் முதலீட்டு வழிகாட்டல்களை கடைப்பிடிப்பதற்கு ஊழிய சேம நிதியம் எதிர்பார்க்கின்றது. நீண்டகால நிறுவனம்சார் முதலீட்டாளரொருவராக நிதியமானது அனைத்தையுமுள்ளடக்கிய முதலீட்டு பன்முகப்படுத்தல் செயன்முறையொன்றின் ஊடாக புதிய சந்தை வாய்ப்புக்களையும் சாதனங்களையும் அதன் ஆதாயத்திற்காக பயன்படுத்திக்கொள்ள நாடுகின்றது.

## வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்

2017இன் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் அறிமுகத்துடன் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களின் தாராளமயமாக்கல் புதிய முன்னேற்றமொன்றைக் காட்டியது. அதற்கமைய, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மூலமான உள்நோக்கிய மூலதனப் பாய்ச்சல்களுக்கான நடைமுறைகள் மேலும் எளிமைப்படுத்தப்பட்டு சீரமைக்கப்படுகின்ற அதேவேளை வதிபவர்கள் மூலம் மூலதன வெளிப்பாய்ச்சல் மீதான மட்டுப்பாடுகள் தெரிவுசெய்யப்பட்ட விடயங்களில் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. புதிய ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தளர்த்தலையும் உள்ளடக்குகின்றது, இது நடைமுறைசார்ந்த தாமதங்களைத் தீர்க்கும் பொருட்டு அதிகரித்த தகைமையுடைய புலம்பெயர் கொடுப்பனவுகளை மாற்றல் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பொதுவான அனுமதியினை இயலச்செய்கின்றது.

வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017இல் வழங்கப்பட்ட புதிய ஒழுங்குவிதிகள், கட்டளைகள், பணிப்புரைகள் தொடர்பான ஆர்வலர்களின் பின்னூட்டல்களை மீளாய்வு செய்யும் செயன்முறையினை நாம் முன்னெடுப்பதுடன் தெளிவுபடுத்துவதற்காக ஒழுங்குவிதிகளை மேலும் எளிமைப்படுத்தும் நோக்குடன் அவற்றை திருத்தியமைப்பதற்கு உத்தேசிக்கின்றோம்.

கொள்கையினை நோக்காகக் கொண்ட ஆராய்ச்சியினால் ஆதரவளிக்கப்பட்ட பேரண்டப் பொருளாதார இயக்கவாற்றல் பற்றிய பகுப்பாய்வினை அடிப்படையாகக் கொண்டு தாராளமயமாக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நாம் உத்தேசிக்கின்றோம். சந்தை

செயற்பாட்டாளர்களுக்கு மத்தியில் ஆரோக்கியமான போட்டியினை அதிகரிப்பதற்கும் முறைசாரா சந்தை நடவடிக்கைகளைக் குறைப்பதற்கும் பணம் மாற்றல் தொழிலுக்கான அனுமதி வழங்கும் பிரமாணங்களை மீளாய்வதற்கும் நாம் திட்டமிடுகின்றோம். வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் தொடர்பில் புதிய நிகழ்நேர வெளிநாட்டுச் செலாவணி அறிக்கையிடுதல் மற்றும் கண்காணித்தல் முறைமையொன்றினை உருவாக்குவதன் மூலம் கண்காணிக்கின்ற தொழிற்பாடானது மேலும் வலுப்படுத்தப்படவுள்ளது. வெளிநாட்டு நாணயத்தில் எல்லை கடந்த மற்றும் உள்ளகக் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புபட்ட அனைத்துத் தரவுகளையும் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் அனைத்தையுமுள்ளடக்கிய பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்யையிடல் முறைமையொன்றினை செயற்படுத்துவதற்கு நாம் உத்தேசிக்கின்றோம்.

அதேவேளை, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வெளிநாட்டுச் செலாவணியினை ஈடுபடுத்துகின்ற அதிகாரமளிக்கப்படாத அத்துடன் சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவதற்கான தெளிவான ஏற்பாடுகள் காணப்படாமையினால் அதிகாரமளிக்கப்படாத வெளிநாட்டு செலாவணிச் சந்தைகள் நடவடிக்கைகள் பற்றிய அதன் கண்காணிப்பினை வலுப்படுத்துவதற்கு வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தினை இயலச்செய்வதற்கு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினுள் பல அமுலாக்கத்தக்க தடைகள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## நிதியியல் உளவறிதல் பிரிவு

நாட்டின் தேசிய பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாத நிதியளித்தலை ஒழித்தல் கொள்கைக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதனை நோக்கியும் நாம் செயற்படுவோம்.

நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவுடன் இணங்கப்பட்ட நடவடிக்கைத் திட்டத்தினை நிறைவுசெய்வதில் கணிசமான முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ளன. இலங்கை “சாம்பல்நிறப் பட்டியலிலிருந்து” 2019 நடுப்பகுதியில் மீட்டுக்கொள்ளப்படும் என்பது எமது எதிர்பார்க்கையாகும்.

இது தொடர்பில், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் போன்ற பல்வேறு முகவராண்மைகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதன் வாயிலாக எமது அடைவினை நாம் விரிவுபடுத்தியுள்ளோம். மேலும்

முன்னேற்றகரமாக நிதியியல் உளவறிதல் பணிகளை செறிவாக்குவதற்கு அனைத்து ஆர்வலர்களின் ஒருங்கிணைப்புடன் பல்வேறு முன்னேற்றகரமான கொள்கைகள் பின்பற்றப்படும்.

## பிரதேச அபிவிருத்தி

நாட்டின் செயல்திறன்மிக்க கடன் விநியோகம் மற்றும் நிதியியல் உட்சேர்த்தல் என்பன ஊடாக உட்சேர்க்கின்ற மற்றும் சமநிலையான பொருளாதார வளர்ச்சியினை அதிகரிக்கும் நோக்குடன் 2018இன் போது நாம் தொடர்ந்தும் புதிய நிதியியல் கொள்கை உபாயங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தினோம்.

நாம் பல்வேறு மீள்நிதியளித்தல், வட்டி உதவுதொகை மற்றும் கடன் உத்தரவாதத் திட்டங்களை தொடர்ந்தும் ஒருங்கிணைத்து, வசதிப்படுத்தி மற்றும் அமுல்படுத்திய அதேவேளை பல வகையான கடன் குறைநிரப்புப் பணிகளை வழங்குகின்றோம். இத்திட்டங்கள் ஊடாக தாங்கக்கூடிய விதத்தில் நிதியை வழங்குவதன் மூலம் நாடு முழுவதும் சிதறிக் காணப்படுகின்ற தனிப்பட்டவர்கள் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு சேவையளிக்கப்பட்டன.

நிதியியல் உட்சேர்த்தல் மட்டத்தினை அதிகரிப்பதற்காக முறையான நிதியியல் துறையினைப் பெற்றுக்கொள்ளாதவர்களை விசேடமாக மையப்படுத்தி நிதியியல் அறிவு மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் தொடரொன்றும் நடாத்தப்பட்டதுடன் 2019ஆம் ஆண்டிலும் இம்முயற்சிகளை தொடர்வதற்கு நாம் உத்தேசிக்கின்றோம்.

மிக முக்கியமாக நாடு முழுவதும் நிதியியல் வசதிகளை வழங்குவதனை மேம்படுத்துவதற்காக மிகவும் காத்திரமான மற்றும் வினைத்திறன் மிக்க செயன்முறையொன்றினை ஊக்குவிக்கும் நோக்குடன் இலங்கைக்கான தேசிய நிதியியல் வசதிகளை வழங்கும் உபாயத்தினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை நாம் ஆரம்பித்தோம். இது தொடர்பில் மத்திய வங்கியானது 2018 சனவரியில் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்துடன் ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றினைக் கைச்சாத்திட்டுள்ளது. தேசிய நிதியியல் வசதிகளை வழங்கும் உபாயத்தின் பாகமொன்றாக நாடு முழுவதும் நிதியியல் வசதிகளை வழங்குதலினதும் நிதியியல் அறிவினதும் தற்போதைய மட்டம் பற்றிய பொதுநோக்கொன்றினையும் அமைப்புப் பாங்கினையும் புரிந்துகொள்வதற்காக நாடளாவிய அளவீடொன்று நடாத்தப்பட்டது.

உற்பத்தியினை நோக்காகக் கொண்ட பொருளாதார நடவடிக்கைகளுக்காக வசதியான நிதியியல் சேவைகள் கிடைக்கும் தன்மையினை உறுதிசெய்வதன் மூலம் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணித் துறைகளில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கின்ற அதேவேளை உட்சேர்க்கின்ற மற்றும் சமநிலையான பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிக்கின்ற முறையான நிதியியல் துறையிலிருந்து நிதியியல் ரீதியாக விடுபட்டுள்ள வகுப்பிரைக் கொண்டு வருவதற்கு 2019இன் நடுப்பகுதியளவில் தேசிய நிதியியல் வசதிகளை வழங்கும் உபாயம் ஆரம்பிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## 5. முடிவுரைக் குறிப்புகள்

சீமாட்டிகளே மற்றும் கனவான்களே,

நாம் எம்முடைய உரையின் முடிவுக் கட்டத்திற்கு வந்திருக்கிறோம்.

எங்களுடைய நாடு 2018ஆம் ஆண்டில் பல இடர்ப்பாடுகளை எதிர்கொண்டதென நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருந்தேன். இவை பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக இருந்தன. எனினும், இலங்கை மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் அத்தகைய சவால்களையும் நிச்சயமற்ற தன்மையினையும் தணிப்பதற்கு தீர்மானமான முறையில் தலையிட்டு பல கொள்கை வழிமுறைகளை அமுல்படுத்தியது என்பதை என்னால் நினைத்துப்பார்க்க முடிகிறது. துறை ரீதியான ஏற்றத்தாழ்வுகள் இருந்தபோதிலும் பொருளாதாரத்தின் பரந்த உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், நாங்கள் எதிர்கொண்ட குறிப்பிட்ட அதிர்வுகளை தாங்கிக்கொள்வதற்கும் இத்தகைய அளவீடுகள் உதவியிருக்கின்றன என்பது தெளிவாகின்றது. இருப்பினும், பல்வேறுபட்ட சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் இன்னும் நிலவுகிறது என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். அத்தோடு மிகுதியாக நேரிடவிருக்கும் ஆபத்துக்கள் ஒட்டுமொத்த பேரண்ட பொருளாதார நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீது மேலதிக அழுத்தங்களைத் தோற்றுவிக்கலாம். எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு இயலுமைப்படுத்தக்கூடிய சூழலொன்றினை உருவாக்கும் பொருட்டு இத்தகைய சாவால்களைக் குறைப்பதற்கும் எங்களுடைய பொருளாதாரத்தையும் நிதியியல் துறையையும் சரியான திசையில் வழிப்படுத்துவதற்கும் இறுதியில் விலை, பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை அடைந்துகொள்வதற்கும் முன்கூட்டிய மற்றும் பயனுள்ள கொள்கை வழிமுறைகள் எங்களுக்கு உதவிபுரியும் என்பதை நாங்கள் நம்புகிறோம். எங்களுடைய எதிர்பார்க்கப்பட்ட பாதையில் சாதகமற்ற நிகழ்வுகளின் காரணமாக விலகல்கள் ஏற்பட்டின் கொள்கைகளில் ஏதாவது திருத்தங்கள் மற்றும் சீராக்கங்களை அறிமுகப்படுத்துவதற்கும் அக்கொள்கைகளைத் தொடர்வதற்கும் இன்றைய தளம்பலும் நிச்சயமற்ற தன்மையினையும் கொண்ட உலகில் தேவையானதாக மாறும்விடயங்களை சரிசெய்யவும் நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்.

எனது இப்பேச்சினை நிறைவு செய்வதற்கு முன்னதாக, மத்திய வங்கியினுடைய முயற்சிகளுக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்கிய பல்வேறுபட்ட தனிநபர்கள் மற்றும்

தரப்பினர்களுக்கு என்னுடைய ஆழமான நன்றியுணர்வையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்வது என்னுடைய கட்டாயக் கடமையாகவும் பொறுப்பாகவும் இருக்கின்றது. முதன்மையானதும் மிக முக்கியமானதுமாக, அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கும், மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களது நிலையான மற்றும் சுபீட்சம் நிறைந்த பொருளாதாரத்தை நோக்கிய வழிகாட்டல்களுக்கும், அவர்கள் வழங்கிய தலைமைத்துவத்திற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் மாண்புமிகு நிதி அமைச்சரின் ஆதரவிற்காகவும், குறிப்பாக மத்திய வங்கியினுடைய பலம்மிக்க சுயாதீனத்திற்கும் அதேவேளை நிதி அமைச்சிற்கும் மத்திய வங்கிக்குமிடையிலான நெருங்கிய ஒத்துழைப்பினை உறுதிப்படுத்திக் கொண்டதற்காகவும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், மத்திய வங்கியின் நாணயச் சபை உறுப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட அளவிறந்த ஆதரவிற்கும், பயனுள்ள கலந்துரையாடல் மற்றும் உள்ளீடுகளுக்கும் நான் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன். 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாணயச் சபையினுடைய முன்னாள் பதவிவழி உறுப்பினர்களாக சேவையாற்றிய திறைசேரி செயலாளர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சவால்மிக்க வருடமான 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாணயச் சபையின் உறுப்பினர்களாகவிருந்து ஆதரவை வழங்கிய திருமதி மனோகரி இராமநாதன், திரு கிறிஷாந்த பெரேரா மற்றும் திரு. நிஹால் பொன்சேகா ஆகியோரிற்கு எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். மூத்த துணை ஆளுநர் முனைவர் நந்தலால் வீரசிங்க மற்றும் துணை ஆளுநர்களான திரு. கே. டி. ரணசிங்க, திரு. எஸ். ஆர். ஆட்டிகல மற்றும் திரு. எச். ஏ. கருணாரட்ண ஆகியோரிற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த சிறந்த நிறுவனத்தில் தலைமை நிர்வாக அதிகாரிகளாக இருந்து கடமைகளை பயனுள்ள முறையில் கையளிப்பதற்கு அவர்களது ஆதரவு மற்றும் மிக உயர்ந்த தொழில்சார் நிபுணத்துவ ஆலோசனைகள் மற்றும் நேர்த்தியான தொழில்நுட்பச் சேவைகளை வழங்கி எனக்கு உதவி புரிந்தார்கள். கடந்த வருடம் வங்கிப் பணிகளிலிருந்து ஓய்வுபெற்ற முன்னாள் உதவி ஆளுநர் திரு. சி. ஜே. பி. சிறிவர்த்தன அவர்கள் ஆற்றிய அசாதாரணமான பணிகளுக்காக எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நாணயக் கொள்கை ஆலோசனைக் குழு, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு அதேபோன்று நாணயச் சபை மதியுரை ஆய்வுக் குழு என்பவற்றின் உறுப்பினர்களது பெறுமதிமிக்க நோக்குகள் மற்றும் ஆலோசனைகள் எங்களது கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு மிகவும் சிறந்த உந்துசக்தியாக உதவிபுரிந்தமைக்காக நன்றி தெரிவிக்கின்றேன்.

இறுதியும் மிக முக்கியமானதுமாக, துணை ஆளுநர்கள், மூத்த திணைக்களத் தலைவர்களுக்கும் குறிப்பாக, பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர் மற்றும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்களுக்கு இக்கொள்கை ஆவணத்தினைத் தொகுப்பதற்கு அவர்கள் ஆற்றிய முயற்சிகளுக்காக எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நாளாந்தம் என் பணிக்கு உதவும் ஆளுநர் செயலகத்திலுள்ள என் நண்பர்களுக்கு எனது விசேட நன்றிகள் உரித்தாகட்டும். அவர்களின் உதவி இல்லாவிட்டால் நான் வெற்றிபெற்றிருக்க முடியாது.

என்னுடைய பார்வையில், மத்திய வங்கியினுடைய மிகப்பெரிய சொத்தாக அங்கு பணிபுரியும் அலுவலர்கள் இருக்கின்றார்கள். அவர்களின்றி நாட்டிற்காக நாங்கள் எங்களுடைய பணிகளை முடிக்கவோ மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்ளவோ முடியாது. தொழில் நிபுணத்துவம், தொழில்சார் தேர்ச்சி மற்றும் நம்பகத்தன்மையை பேணுவதுடன் முக்கியமாக குழப்பகரமான நிலைகளுக்கு மத்தியிலும் கூட தைரியமாகவும், உற்சாகமாகவும் நாட்டிற்காக பணி புரிகின்ற மத்திய வங்கியினுடைய அனைத்து அலுவலர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொருளியல் பேராசிரியரும் பெடரல் ஒதுக்குச் சபை ஆளுநர்களுடைய முன்னாள் தலைவருமாகிய பென் பெர்னான்கேயின் மேற்கோளோடு என் உரையை முடிக்க விரும்புகின்றேன்: “மத்திய வங்கியானது, எப்படி கொள்கைகள் தோன்றியது என்றும், சந்தை பங்குபற்றுநர்கள் பொருத்தமான அனுமானங்களைச் செய்வதற்கு சிறந்த சந்தர்ப்பம் பற்றியும் பொதுமக்களுக்கு மிகவும் வழிகாட்டல்களை வழங்க முடியும்.

எங்களுடைய பொருளாதாரத்தில் நாணய மற்றும் நிதியியல் தொடர்பான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கொள்கைகளும் திட்டங்களும் தொடர்ச்சியான உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்திக் கொள்வதில் கருவியாக விளங்கும் என நான் நம்புகின்றேன். ஆர்வலர்களுக்கான தங்களின் ஆதரவின்றி இத்தகைய கொள்கைகளின் வினைத்திறனையும் வெற்றியையும் உணரமுடியாது. அத்தோடு, கடந்த வருடம் மற்றும் கடந்த காலங்களில் இருந்ததைப் போன்று நீங்கள் உங்களுடைய அதிகபட்ச ஆதரவையும் பங்களிப்பையும் வழங்கி முன்னேறச் செய்வதற்கு தொடர்ந்தும் உதவுவீர்கள் என நம்புகிறேன்.

தங்களுக்கு நன்றி, தங்கள் எல்லோருக்கும் 2019ஆம் புத்தாண்டு மகிழ்ச்சிகரமானதாகவும் சுபீட்சம் நிறைந்ததாகவும் அமைய வாழ்த்துகிறேன்.